Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, MAY 01, 2025

வியாழக்கிழமை 01, மே 2025 | ஒளி: 08 கதிர்: 229 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## தொழிலாளர் தின வாழ்த்துக்கள்

இன்று தொழிலாளர் தினம், இத்தினத்தை யொட்டி, ஜனாதிபதி அனுரகுமா திசாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய, உள்ளிட்ட அரசியல் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். உழைக்கும் வர்க்கத்தினர் அனைவருக்கும் நாமும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(வாழ்த்துச் செய்திகள் P5)



# “GSP+ மீளாய்வுக்கு சாதகம்”

GSP+ மீளாய்வு சாதகமான முறையில் கருத்தில் கொள்ளப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவிற்கான தலைவர் சார்ல்ஸ் வைட்லி( Charles Whiteley), தெரிவித்தார்.


இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் இடையில் புதன்கிழமை (30) அன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே சார்ல்ஸ் வைட்லி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது என்றும், தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைய இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

GSP+ சலுகைக்கு

# “நிபந்தனைகளை விதியுங்கள்”



### தமிழரின் எதிர்பார்ப்பு என மனோ குழு எடுத்துரைப்பு

ஜிஎஸ்பி ப்ளஸ் வரி சலுகையை வழங்க நிபந்தனைகளை விதியுங்கள். இதுதான் தமிழரின் எதிர்பார்ப்பாகும் என ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி ப்ளஸ் (GSP+) கண்காணிப்புக் குழுவிடம் எடுத்துரைத்துள்ள மனோ கணேசன் தலைமையிலான குழு எழுத்து மூல ஐந்து அம்ச கோரிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளது.

சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் சலிப்பு அடைந்து விட்டார்கள். இலங்கை தொடர்பில் ஐ.நாவில் பிரதான பங்களிப்பு செய்த அமெரிக்காவும் இன்று ஒதுங்கி விட்டது. இந்நிலையில் எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதைப் புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுகுங்கள் என்றும் எடுத்துரைத்துள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தின் உடனடி இடை நிறுத்தம், புதிய அரசியலமைப்புக்கான கலந்துரையாடல் உடனடி ஆரம்பம், உண்மை ஆணைக்குழு (Truth Commission) மூலம் காணாமல் போனோர் மற்றும் பொறுப்பு கூறல் விவகாரங்களின் உடனடி அர்த்தப்பூர்வ நடவடிக்கை, நீண்டகால தமிழ் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, நவீன அடிமைத்துவம் அம்சங்களைக் கொண்ட மலையக தமிழர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட வாழ் மக்களை ஐரோப்பிய கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து அவர்களது காணி உரிமை உட்பட வாழ்வுரிமைகளை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகளை எழுத்து மூலமாகவும், உரையாடல் மூலமாகவும், இலங்கைக்கு வரிச் சலுகையைத் தொடர்ந்து வழங்கலாமா? என ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்க கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய ஜீஎஸ்பி ப்ளஸ் (GSP+) கண்காணிப்பு குழுவினரிடம் நாம் நேரடியாக சமர்ப்பித்தோம்.

தொடர்ச்சி P2

## சம்பிக்கவுக்கு எதிரான வழக்குக்கு திகதி அறிவிப்பு

ராஜகிரிய பகுதியில் 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற வாகன விபத்து மற்றும் ஆதாரங்களை மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, வெலிக்கடை பொலிஸ் நிலையக பொறுப்பதிகாரியாக பணியாற்றிய உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் சுதத் அஸ்மடல உட்பட மூவருக்கு எதிரான வழக்கை ஜூலை 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸ்ஸங்க, புதன்கிழமை (30) உத்தரவிட்டார்.

2016 பெப்ரவரி 28, அன்று விபத்து நடந்த நேரத்தில், வாகனத்தின் ஓட்டுநர் திலும் துசித குமார என்பதைக் குறிக்கும் வகையில் பொய்யான ஆதாரங்களை உருவாக்க சதி செய்ததாகவும்,

தொடர்ச்சி P2

இலங்கை–பாக். இருதரப்பு பாதுகாப்பு உரையாடல்

## மூலோபாய உறவுகளை வலுப்படுத்துகிறது

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான உறுதிப்பாட்டைக் குறிக்கும் வகையில், 5ஆவது வருடாந்த இலங்கை-பாகிஸ்தான் இருதரப்பு பாதுகாப்பு உரையாடல் திங்கள்கிழமை (28) பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் ஆரம்பமானது.

இலங்கைக் குழுவிற்கு பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தா (ஓய்வு) தலைமை தாங்குகிறார். கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (பாதுகாப்பு) ஜயந்த எதிரிசிங்க ஆகியோரும் இணைந்து கொண்டார்.



தொடர்ச்சி P2



## “17,000 பேருக்கு டெங்கு”

2025 முதல் நான்கு மாதங்களில் இலங்கையில் 17,000 க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.


மேற்கு மாகாணம் தொடர்ந்தும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 46 சதவீதமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு 17,459 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், டெங்கு காய்ச்சலால் ஆறு பேர் உயிரிழந்துள்ளதாகவும் சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் மொத்தம் 5,018 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், இரத்னபுரியில் 985 பேர் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், பொதுமக்கள் 24 மணி நேரத்திற்குள் மருத்துவ உதவியை நாட வேண்டும் என்றும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் இருந்தால் 24 மணி நேரத்திற்குள் மருத்துவரை அணுக வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவுவதைத் தடுக்கவும், சமூக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவும் கொசுக்கள் பெருகும் இடங்களை சுத்தம் செய்யுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்துகின்றனர்.



## கூட்டு வன்புணர்வு: ஐவர் கைது

45 வயதுடைய பெண்ணொருவர் கடத்தப்பட்டு, முச்சக்கர வண்டி மற்றும் வீட்டிற்குள் வைத்து கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக வெலிபென்ன பொலிஸார் ஐவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## இரண்டு நாட்களுக்கு DMT மூடப்படும்

மே 6ஆம் திகதியன்று நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு வசதியாக, கொழும்பு-05, நாரஹேன்பிட்டி, எல்விடிகல மாவத்தையில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்துத் துறையின் தலைமை அலுவலகம் Department of Motor Traffic இரண்டு தினங்களுக்கு மூடப்படும்.

தொடர்ச்சி P2



## கொழும்பில் இன்று விசேட போக்குவரத்து திட்டம்

உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள பேரணிகளுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து திட்டமொன்றை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## சுவிஸ் தூதுவரின் இல்லத்தில் சுருட்டினர்

இலங்கைக்கான சுவிஸ் தூதரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் உள்ள பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் நான்கரை மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட தங்க மோதிரங்கள், கழுத்தணிகள் மற்றும் பதக்கங்கள் திருடப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தொடர்ச்சி P2

சில அலைபேசிகளில்

## இனிமேல் WhatsApp வேலை செய்யாது

பழைய ஆண்ட்ராய்டு வெர்ஷன் (Android Version) கொண்ட அலைபேசிகளை வைத்திருந்த பயனர்களுக்கு (யூசர்களுக்கு) நடந்ததை போலவே இப்போது ஐபோன்களை (iPhones) வைத்திருக்கும் பயனர்களுக்கும் (யூசர்களுக்கும்) நடக்க இருக்கிறது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “GSP+ மீளாய்வுக்கு சாதகம்”

ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகை தரப்படுத்தப்பட்ட மற்றும் தரமான பொருட்களை விநியோகிக்க இலங்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசிய தலைவர் சார்ல்ஸ் வைட்லி குறிப்பிட்டார்.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச் சலுகையை வழங்க, கருத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன என்றும் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச் சலுகை அல்லது பொதுவான விருப்பத்தேர்வு முறை தொடர்பான 27 சர்வதேச இணக்கப்பாடுகளை செயல்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

அதேபோல், ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகை இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதார ரீதியில் சரிவடைவதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் அரசியல் முறையும், வீண்விரயமும், மோசடியுமே காரணமாக அமைந்திருந்ததாகவும், இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருவதாகவும், அதற்கு சிறிது காலம் அவகாசம் அவசியம் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். தற்போதைய அரசாங்கத்தின் மீது ஒட்டுமொத்த மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இலங்கையில் முன்னைய அரசாங்கங்கள் தெற்கு சிங்கள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன.ஆனால் இம்முறை வடக்கின் தமிழ் மக்கள், கிழக்கு முஸ்லிம் மக்கள் மற்றும் தெற்குச் சிங்கள மக்களும் தற்போதைய அரசாங்கத்தை உருவாக்க ஆதரவளித்தனர் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரெனோ (Carmen Moreno), வர்த்தகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஜெனரல், கொள்கை அதிகாரி கைடோ டோலாரா (Guido Dolara), ஐரோப்பிய பிரத்தியேக நடவடிக்கை சேவையின் இலங்கை அதிகாரி கலிஜா அகிஷேவா (Galija Agisheva) ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# “நிபந்தனைகளை விதியுங்கள்”

இந்த நிபந்தனைகளை திகதி குறித்து நிறைவேற்றினால் மாத்திரமே இலங்கைக்கு ஜிஎஸ்பி ப்ளஸ் (GSP+) வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி ப்ளஸ் வரிச் சலுகை கண்காணிப்புக் குழுவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவிற்கும் இடையில் சந்திப்பு உரையாடல் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது.

கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்.பி, பிரதி தலைவர் வே.இராதாகிருஷ்ணன் எம்.பி, ஜனநாயக மக்கள் முன்னணியின் (ஜ.ம.மு.) சர்வதேச விவகார உப தலைவர் பாரத் அருள்சாமி, ஜ.ம.மு. சட்ட விவகார செயலாளர் சச்சின் கணேசன் ஆகியோரும், ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் தூதுவர் கார்மென் மொரேனோ, அரசியல் செயலர், கரோலினா மற்றும் ஐந்து பேர் கொண்ட ஜிஎஸ்பி ப்ளஸ் கண்காணிப்பு ஆகியோரும் கலந்துரையாடலில் இடம் பெற்றனர்.

இது தொடர்பில், மனோ எம்.பி. தலைமையில் தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவினர் ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி ப்ளஸ் (GSP+) கண்காணிப்பு குழுவினரிடம் கையளித்த முன்மொழிவுகள் அடங்கிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

(01) பயங்கரவாத தடை சட்டம்

இன்றைய தேவைக்கு குற்றவியல் சட்டக்கோவை தாராளமாக போதுமானது. இதுவே ஜே.வி.பியின் கடந்த கால நிலைப்பாடாக இருந்தது. எனினும், புதிய சட்டம் அவசியமாயின் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் புதிய மசோதா பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும்வரை இன்றைய பயங்கரவாத தடை சட்ட பாவனை உடனடியாக இடை நிறுத்தப்பட வேண்டும்.

(02) புதிய அரசியலமைப்பு

இந்த அரசு தேர்தல் வேளையில், கடந்த நல்லாட்சி காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்த பட்ட புதிய அரசியலமைப்பு பணியை நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து, மீள ஆரம்பிப்போம் என உறுதி அளித்தது. அவ்வேளையில், நானும், இன்றைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் அந்த புதிய அரசியலமைப்பு வழிகாட்டல் குழுவில் இருந்தோம். இந்த பணி இந்த வருடமே செய்து முடிக்கப்பட வேண்டும். வருடங்கள் கடந்தால் இதை ஒரு போதும் செய்து முடிக்க முடியாது என்பது எமது அனுபவமாகும். ஆகவே, இன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு கலந்துரையாடல் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகார பகிர்வின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்.

(03) பொறுப்பு கூறல்

உடனடியாக உண்மை ஆணைக்குழு (Truth Commission) ஆரம்பிக்கப்பட்டு, பொறுப்பு கூறல் அடிப்படையில் வலிந்து காணாமல் போனோர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

(04) தமிழ் அரசியல் கைதிகள்

பயங்கரவாத தடை சட்டத்தில் கைதாகி சிறையில் இருக்கும் அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இன்று பத்து தமிழ் கைதிகள் நீண்டகாலமாக உள்ளனர். அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். கைதிகளின் பெயர் பட்டியல் விபரங்களை, ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பின் சார்பாக மு.கோமகன் தயாரிக்க, மக்கள் போராட்ட முன்னணி சார்பாக தோழர் ராஜ்குமார் ராஜீவ்காந்த் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அது இங்கே ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி ப்ளஸ் (GSP+) கண்காணிப்பு குழுவினரிடம் தரப்படுகிறது.

(05) பெருந்தோட்ட மக்கள் மலையக தமிழ் மக்கள் பரப்பில் இருக்கின்ற பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் மிகவும் நலிவுற்ற பிரிவினர். இந்த மக்களின் நிலைமை இனிமேல் ஐரோப்பிய ஒன்றிய ஜீஎஸ்பி ப்ளஸ் (GSP+) கண்காணிப்பின் கீழ் வர வேண்டும். அதற்கான தரவுகள்:

(அ) தோட்டங்களில் உற்பத்தியாகும் தேயிலை ஐரோப்பிய காலை உணவு மேசை வரை செல்லும் விநியோக பாதையின் ஆரம்பமான பெருந்தோட்டங்கள் நவீன அடிமைத்துவ அம்சங்களைக் கொண்டிருக்கின்றமை

(ஆ) அரசின் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள், பெருந்தோட்ட மக்களை போதுமான அளவு உள்வாங்காததால், அவர்கள் தனியார் கம்பனிகளின் தயவில் வாழ வேண்டி உள்ளமை.

(இ) நவீன அடிமைத்துவ தினக்கூலி தொழிலாளர் என்ற நிலையில் இருந்து, பெருந்தோட்ட தொழில் துறையில் கூட்டுப் பங்காளராக மாறுகின்ற கூட்டு வர்த்தக மாற்றம் வராமை.

(ஈ) தேசிய நீரோட்டத்தில் இருந்து திட்டமிட்ட முறையில் தள்ளி வைக்கப்பட்ட காரணத்தால், சம உரிமை மறுக்கப்பட்டு, நில உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை, வாழ்வாதார உரிமை ஆகியவை மறுக்கப்பட்டு, பொது நிர்வாக, சமூக கட்டமைப்பு மற்றும் நாட்டின் பொது நலச் சேவைகள் கிடைக்காமை.

# சுவிஸ் தூதுவரின் இல்லத்தில் சுருட்டினர்

சுவிஸ் தூதர் கொள்ளுப்பிட்டி பொலிஸில் செவ்வாய்க்கிழமை (29) செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

சுவிட்சர்லாந்திற்கான இலங்கைத் தூதர் கடந்த 12ஆம் திகதி சுவிட்சர்லாந்துக்குப் புறப்பட்டு, 27ஆம் திகதி இலங்கைக்குத் திரும்பினார். அந்தக் காலகட்டத்தில், அவரது ஐந்து ஊழியர்கள் பணியில் இருந்தனர், மேலும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் அந்த ஊழியர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது.

தனது அதிகாரப்பூர்வ இல்லத்தின் மேல் தளத்தில் உள்ள ஒரு அறையில் இருந்த ஒரு பெட்டகத்திலிருந்து வைர மோதிரம், உயர்ந்த ரத்தினக் கல் கொண்ட மோதிரம், பச்சைக் கல் மற்றும் தங்க நெக்லஸ் கொண்ட மோதிரம், வெள்ளைத் தங்க அடித்தளத் தகடு, தங்கத் திருமண மோதிரம், ரூபி கல் கொண்ட தங்க மோதிரம், தங்கப் பதக்கம், சபையர் கற்கள் கொண்ட ஒரு ஜோடி தங்கக் காதணிகள், ஒமேகா லேடிமேடிக் கடிகாரம் மற்றும் ஒமேகா தங்கக் கடிகாரம் உள்ளிட்ட தங்கப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகத் தூதுவர், பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பிக்கவுக்கு எதிரான...

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை சட்டப்பூர்வ தண்டனையிலிருந்து பாதுகாக்க ஆதாரங்களை அழிக்க சதி செய்ததாகவும் மூன்று பிரதிவாதிகள் மீதும் சட்டமா அதிபர் குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை சட்டப்பூர்வ தண்டனையிலிருந்து பாதுகாப்பதற்காக, நீதவான் நீதிமன்றத்தில் தவறான அறிக்கையை சமர்ப்பித்ததற்காக, வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய, பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் சுதத் அஸ்மடல மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஜீப் வாகனத்தை ஓட்டிச் சென்றதை அறிந்து, தான் அந்த வாகனத்தின் ஓட்டுநர் என்று நீதவான் நீதிமன்றத்தில் பொய்யாகக் கூறியதற்காக, பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதியாகச் செயல்பட்ட திலும் துசித குமார மீது சட்டமா அதிபர் தனி குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

மூவருக்கு எதிராக 16 குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர் முன்வைத்துள்ளார். இந்த வழக்கு, புதன்கிழமை (30) விசாரணைக்கு வந்தபோது பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

வழக்கு அழைக்கப்பட்டபோது, பிரதிவாதி பாட்டலி சம்பிக்க ரணவக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, சாட்சியங்களை முன்வைத்து, சட்டமா அதிபர் வழக்கை தாக்கல் செய்த விதம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான முடிவு இன்னும் கிடைக்கப்பெறாததால், வழக்கை ஒத்திவைக்குமாறு கோரினார்.

உண்மைகளை பரிசீலித்த நீதவான், வழக்கை ஜூலை 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# மூலோபாய உறவுகளை வலுப்படுத்துகிறது...

அதேபோன்று, பாகிஸ்தான் குழுவிற்கு பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் பாதுகாப்புச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் முஹமது அலி (ஓய்வு) தலைமை தாங்குகிறார்.

நடைபெற்ற வரும் பாதுகாப்பு உரையாடலுடன் இணைந்ததாக, எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தா (ஓய்வு), பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா முஹம்மது ஆசிஃப் உடன், செவ்வாய்க்கிழமை (29) சந்திப்பு நடத்தினார்.

இந்த உயர்மட்ட ஈடுபாடுகள் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல், பிராந்திய பாதுகாப்பு செயற்பாடுகள் குறித்த பரஸ்பர புரிதலை வளர்ப்பது மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இரு நாடுகளும் பரஸ்பர மரியாதை மற்றும் மூலோபாய ஒத்துழைப்பில் வேரூன்றிய நீண்டகால உறவைப் பகிர்ந்து கொள்கின்றன. தெற்காசிய பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையைப் பேணுவதிலும் அமைதியை மேம்படுத்துவதிலும் கூட்டாண்மைகளின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை இந்த உரையாடல் பிரதிபலிக்கிறது.

புதன்கிழமையுடன் (30) முடிவடையும் மூன்று நாள் உரையாடல், இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் மற்றும் பரந்த பிராந்திய பாதுகாப்பு நோக்கங்களுக்குப் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கூட்டு வன்புணர்வு: ஐவர் கைது

பாதிக்கப்பட்ட பெண்ணின் புகாரின்படி, திங்கட்கிழமை இரவு 8.50 மணியளவில் கல்மட்டை நகரில் உள்ள 05ஆவது போஸ்ட் சந்திப்பில் பேருந்தில் இருந்து இறங்கிய பின்னர் இனந்தெரியாதோர் கடத்தியுள்ளார்.

முச்சக்கர வண்டியில் வந்த மூன்று ஆண்கள் தன்னை வலுக்கட்டாயமாக முச்சக்கர வண்டிக்குள் இழுத்துச் சென்று, முச்சக்கர வண்டிக்குள் வைத்தே பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

பின்னர் சந்தேக நபர்கள் தன்னை ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு அவர்கள் தொலைபேசி மூலம் மேலும் இருவரைத் தொடர்பு கொண்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பின்னர் இரண்டு ஆண்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்து தன்னை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார்கள். சந்தேக நபர்களில் நான்கு பேரை அடையாளம் கண்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 19, 23, 24 மற்றும் 38 வயதுடைய சந்தேக நபர்கள் மீகம பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள், மதுகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவித்த வெலிபென்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரண்டு நாட்களுக்கு DMT மூடப்படும்

2025.05.05 (திங்கட்கிழமை) மற்றும் 2025.05.06 (செவ்வாய்க்கிழமை) ஆகிய திகதிகளும் மூடப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

06.05.2025 அன்று நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக, (ஈ) கொழும்பு கிழக்குத் தொகுதி எண்கள் 06 மற்றும் 07 க்கான வாக்குச் சாவடிகளாக மோட்டார் போக்குவரத்துத் துறையின் தலைமை அலுவலகம் செயற்படும்.

# விசேட போக்குவரத்து திட்டம்

கொழும்பு நகரில் 15 இடங்களில் பேரணிகள், கூட்டங்கள் மற்றும் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நடைபெறவுள்ள மே தினப் பேரணிகள், கூட்டங்கள் மற்றும் நினைவேந்தல்களால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுமாயின், அப்பகுதிகளைத் தவிர்த்து மாற்று வீதிகள் வழியாக வாகன போக்குவரத்தை மேற்கொள்ளுமாறு பொலிஸார் சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், மாற்று வீதிகள் பற்றிய தகவல்கள் தேவைப்படும் போது, வாகன போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து உதவி பெறலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனிமேல் WhatsApp வேலை செய்யாது

சில பழைய ஐபோன்களில் வாட்ஸ்அப் (WhatsApp) சேவை மே 5ஆம் திகதி முதல் நிறுத்தப்பட இருக்கிறது.

ஆகவே, அதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு வேறு வகைகளுக்கு மாறுவது நல்லது. எந்தெந்த வகைகளில் வாட்ஸ்அப் வேலை செய்யாது? எந்த ஐஓஎஸ் வெர்ஷன் (iOS Version) நிறுத்தப்படுகிறது உள்ளிட்ட விவரங்களை இப்போது தெரிந்து கொள்ளலாம்.

ஆண்ட்ராய்டு பயனர்களும் சரி, ஐஓஎஸ் பயனர்களும் சரி, வாட்ஸ்அப் ஆப்-ஐ பயன்படுத்தி வருகின்றனர். இதில் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் முக்கிய விவரங்கள் அதிகம் பகிரப்படுகின்றன. இதனால், போதுமான பாதுகாப்பு இல்லாமல் இருக்கும் ஆண்ட்ராய்டு வெர்ஷன் மற்றும் ஐஓஎஸ் வெர்ஷனில் வாட்ஸ்அப் சேவை (WhatsApp Services) நிறுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், இது மிகவும் பழைய வெர்ஷன்களில் மட்டுமே இப்படி செய்யப்படுகிறது. ஆகவே, ஒட்டுமொத்த கஸ்டமர்களும் கவலைப்பட வேண்டியது இல்லை. ஐஓஎஸ் 12 (iOS 12) அல்லது அதற்கு மேலான வெர்ஷன்களில் இப்போது வாட்ஸ்அப் சேவை தடையில்லாமல் கிடைக்கிறது. இருப்பினும், ஐஓஎஸ் 15.1 (iOS 15.1) வெர்ஷனிலும் மினிமம் பீச்சர்களுடன் வாட்ஸ்அப் கிடைக்கிறது.

ஆகவே, இதற்கு முன்னதாக வெளியான ஐஓஎஸ் வெர்ஷன்களை கொண்ட ஐபோன்களில் மே 5ஆம் திகதியில் இருந்து வாட்ஸ்அப் வேலை செய்யாது என்று மெட்டா நிறுவனம் அறிவித்தது.

இந்த அறிவிப்பு கடந்தாண்டு டிசம்பர் மாதம் வெளியானது. ஆகவே, 5 மாதங்களுக்கு காலஅவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்களுக்குள் ஐஓஎஸ் 15.1 அல்லது அதற்கு மேலான வெர்ஷன்களுக்கு மாற வேண்டும். இல்லையென்றால், அதற்கு முன்னதாக இருக்கும் வெர்ஷன்களில் வாட்ஸ்அப் பயன்படுத்த முடியாது.

இதற்கு முன்னதாக எந்த வெர்ஷன் இருக்கிறது என்று பார்த்தால், ஐஓஎஸ் 12.5.7 (iOS 12.5.7) இருக்கிறது. இந்த வெர்ஷனில் ஐபோன் 5எஸ் (iPhone 5s), ஐபோன் 16 (iPhone 6) மற்றும் ஐபோன் 6 பிளஸ் (iPhone 6 Plus) மாடல்களில் வருகின்றன. ஆகவே, இதில் வாட்ஸ்அப் வேலை செய்யாது.

மே 5ஆம் திகதி வரையில் காலஅவகாம் இருக்கிறது. இதற்குள் ஐஓஎஸ் 15.1 அதற்கு மேலான வெர்ஷன்களுக்கு அப்டேட் செய்துகொள்வது நல்லது. அந்த மாடல்களுக்கு ஐஓஎஸ் 15.1 வெர்ஷன் அப்டேட்டில் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆகவே, ஐபோனில் செட்டிங்ஸ் சென்று ஜெனரல் டேப்-ஐ கிளிக் செய்து கொள்ளுங்கள். பிறகு சாப்ட்வேர் அப்டேட் தோன்றும். அதில் அப்டேட் இருந்தால் செய்து முடியுங்கள். இல்லையென்றால், இனிமேல் அவற்றில் வாட்ஸ்அப் பயன்படுத்த முடியாது.

ஏற்கனவே, ஜனவரி 1ஆம் திகதி முதல் பல்வேறு ஆண்ட்ராய்டு போன்களில் வாட்ஸ்அப் சேவை நிறுத்தப்பட்டது. அதில், சாம்சங் கேலக்ஸி எஸ்3, சாம்சங் கேலக்ஸி நோட் 2, சாம்சங் கேலக்ஸி ஏஸ் 3 மற்றும் சாம்சங் கேலக்ஸி எஸ்4 மினி ஆகிய போன்களும் அடங்கும்.

அதேபோல மோட்டோரோலா நிறுவனத்தின் முதல் ஜெனரேஷன் மடலான மோட்டோ ஜி, மோட்டோரோலோ ரேசர் எச்டி, மோட்டோ ஈ 2014 மாடல்களிலும் வாட்ஸ்அப் சேவை நிறுத்தப்பட்டது. மேலும், சோனி எக்ஸ்பிரீயா இசட், சோனி எக்ஸ்பிரீயா எஸ்பி, சோனி எக்ஸ்பிரீயா டி மற்றும் சோனி எக்ஸ்பிரீயா வி மாடல்களிலும் நிறுத்தப்பட்டது. இப்படி பல்வேறு மாடல்கள் பட்டியலில் இருக்கின்றன.










# ஆர்ப்பாட்டம்...

இந்தியாவின் காஷ்மீரில் இடம்பெற்ற தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்து கொழும்பு நகர சபைக்கு முன்பாக புதன்கிழமை (30) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, நீதி கேட்டும், குறித்த பிரதேசத்தில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.சந்நதி – கதிர்காமம்

# பாதயாத்திரை ஆரம்பம்

■ வி.ரி.சகாதேவராஜா

இலங்கையின் மிக நீண்ட யாழ்ப்பாணம்-கதிர்காமம் பாதயாத்திரை, செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து வியாழக்கிழமை (01) அதிகாலை ஆரம்பமானது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மொணராகலை, ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து 55 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிக நீண்ட தூர கதிர்காம பாதயாத்திரையாகும்.

அதன் முன்னோடியாகக் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பிரான்பற்று பெரிய வளவு கந்தசாமி ஆலயத்திலிருந்து செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தை நோக்கிய ஆரம்ப முன்னோடி பாதயாத்திரை ஆரம்பமானது.



ஜெயா வேல்சாமி தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை (29) அன்று நேராக மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குச் சென்று செல்வச்சந்நிதி ஆலயத்தை வந்தடைந்தனர்.

செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து முறைப்படி கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரை ஜெயாவேல் சாமி தலைமையில் வியாழக்கிழமை(01) ஆரம்பமானது.

ஆரம்பத்தில் சுமார் 40 அடியார்கள் பங்குபற்றுகின்றனர்.

இடைநடுவில் கலந்து கொள்ளும் அடியார்கள் 077-838 6381 அல்லது 076-3084791 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து விபரங்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு தலைவர் ஜெயாவேல்சாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

# மரம் முறிந்து விழுந்ததில் வீட்டுக்கு பலத்த சேதம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தலவாக்கலை, லிந்துலை, மெராயா தோட்ட பகுதியில் செவ்வாய்க்கிழமை (29) பிற்பகல் வீசிய பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக, தோட்ட குடியிருப்பு வரிசை மீது மரம் முறிந்து விழுந்ததில் ஒரு வீடு கடுமையாக சேதமடைந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நாட்களில், நுவரெலியா, நானுஓயா, தலவாக்கலை மற்றும் லிந்துலை பகுதிகளில் பிற்பகல் நேரங்களில் கன மழையுடன் பலத்த காற்று தினமும் வீசுவதாகத் தோட்டத் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.



தோட்ட குடியிருப்புகளுக்கு அருகில் இருந்த ஒரு பெரிய யுகெலிப்டஸ் மரம் வீடுகள் மீது விழுந்ததாகவும், இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றாலும், வீடொன்று பலத்த சேதமடைந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

# மண்டைதீவில் மஞ்சளுடன் ஒருவர் கைது

■ எஸ். தில்லைநாதன்

மண்டைதீவு பகுதியில் 500 கிலோ கிராம் மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவர், செவ்வாய்க்கிழமை (29) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சளை கைமாற்றும் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிமேஷின் பிரேத பரிசோதனை:

# சாட்சியங்களுக்கு நோட்டீஸ்

வெலிக்கடை பொலிஸாரால் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது தாக்கப்பட்டு, உயிரிழந்த நிமேஷ் சத்சார (வயது25) என்ற இளைஞனின் பிரேத பரிசோதனை தொடர்பான விசாரணை மே 16ஆம் திகதி ஆரம்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க புதன்கிழமை (30) உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான முறைப்பாட்டில் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான வழக்கு, நீதிமன்றத்தில் புதன்கிழமை (30) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குற்றப் புலனாய்வுத் துறையின் மரண விசாரணைப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு விடுத்த கோரிக்கையை பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மேலதிக அறிக்கையை சமர்ப்பித்த விசாரணை அதிகாரிகள், ஏப்ரல் 17ஆம் திகதி நீதிமன்ற உத்தரவுகளின்படி, இறந்தவரின் சடலம், ஏப்ரல் 23ஆம் திகதி மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டதாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

இறந்தவரின் பிரேத பரிசோதனை மூன்று பேர் கொண்ட நிபுணர் மருத்துவக் குழுவால் மீண்டும் நடத்தப்பட்டதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.



நிபுணர் மருத்துவக் குழுவால் நடத்தப்பட்ட இறந்தவரின் பிரேத பரிசோதனை தொடர்பான உண்மைகள் அடங்கிய முதற்கட்ட அறிக்கையும் நீதிமன்றத்தில் புதன்கிழமை (30) சமர்ப்பிக்கப்பட்டது.

இறந்தவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் தற்போது அரசு மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக 22 சாட்சிகளின் பட்டியலை அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அறிவித்த விசாரணை அதிகாரிகள், 1 முதல் 5 வரையிலான சாட்சிகளுக்கு நோட்டீஸ் அனுப்பவும், மே 16 அன்று நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட தரப்பினரின் சார்பாக, இறந்த நிமேஷ் சத்சாரவின் தாயும் தந்தையும் வழக்கறிஞர் சேனக பெரேராவுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

# செவிலியர் பயணித்த கார் விபத்து

■ ரஞ்சித் ராஜபக்ஷ

டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் செவிலியர்கள் இருவர் சென்ற கார், நோர்வூட் கெந்தகொல்ல தோட்டம் பகுதியில் புதன்கிழமை (30) அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

காருக்கு முன்பாக பயணித்த தனியார் பேருந்தை முந்திச் செல்ல முயன்ற போது, எதிர் திசையில் வந்த லொறியில் மோத முயன்ற நிலையில் காரை தேயிலைத் தோட்டத்தை நோக்கித் திருப்பியதாகவும் இதன்போது கார் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி, சுமார் 60 அடி பள்ளத்தில்



கவிழ்ந்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த பெண், டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கார் பலத்த சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குளோரின் கசிவால் நால்வர் பாதிப்பு

பசறை நகரில் நீர் சுத்திகரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் குளோரின் சிலிண்டரில் ஏற்பட்ட திடீர் கசிவைத் தொடர்ந்து நான்கு பேர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குறித்த வைத்தியசாலையிலிருந்த அனைத்து உள்நோயாளிகளும் வார்டுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதிலிருந்த, 14 நோயாளிகள் தற்காலிகமாக ஹாப்டன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனைக்கு அருகிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்த 76 வயதுடைய பெண் ஒருவர் குளோரின் சிலிண்டர் கசிவு காரணமாக சுவாசிப்பதில் சிரமமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 43 வயதுடைய ஆண், 73 வயதுடைய பெண் மற்றும் 26 வயதுடைய பெண் ஆகியோர் பசறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பசறை பிரதேச சபைக்குட்பட்ட பசறை நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குப் பயன்படுத்தப்படும் குளோரின் சிலிண்டரில் திடீரென கசிவு ஏற்பட்டதால், அவர்கள் நால்வரும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதாகவும், பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நோயாளியின் நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# “இந்திய மீனவர்களை தடுக்க நடவடிக்கை”

“இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் இலங்கை கடற்படையினருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன” என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். நெடுந்தீவு பகுதிக்கு செவ்வாய்க்கிழமை (29) அன்று பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையால் தமது வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் மீனவர்கள், அமைச்சரிடம் எடுத்துரைத்தனர். இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்கு நிரந்தர பாதுகாப்பு நெறிமுறையொன்று அவசியம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதிலளித்த அமைச்சர், இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்குரிய



இராஜ தந்திர நடவடிக்கை உட்பட அனைத்து விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும், இது தொடர்பில் கடற்படையினருக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் இறங்குதுறை பிரச்சினை சம்பந்தமாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார். அதேவேளை, நெடுந்தீவு மக்களுடனும் அமைச்சர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது நெடுந்தீவு அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.



# “சேவலே கூவும்”

■ எஸ்.சதீஸ்

“உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையகத்தில் எத்தனை கட்சிகள் போட்டியிட்டாலும் உள்ளூராட்சி சபைகளை தன்னிச்சையாக ஆட்சி அமைக்கக்கூடிய தகுதி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு மாத்திரமே உள்ளது” என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொத்மலை பகுதியில் செவ்வாய்க்கிழமை (29) அன்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “கடந்த நவம்பர் மாதம் மாற்றம் வேண்டும் என கூறி நாட்டில் உள்ள இளைஞர்கள், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் இணைந்து மாற்றம் ஒன்றைக் கொண்டு வந்தனர். 159 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்த இந்த அரசாங்கம் நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரு அமைச்சுப் பதவியைக் கூட வழங்கவில்லை. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதுளை மாவட்டத்திற்கும் பிரதி அமைச்சர் பதவி இரத்தினபுரி மாவட்டத்திற்குப் போயுள்ளது. இவ்வாறு இருக்கின்ற போது மலையக மக்களுக்கு எந்த வகையில், வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

பாராளுமன்றத்தில் ஆசனங்களின் பெரும்பான்மை அதிகரிக்கின்றபோது, மலையகத்திற்கான முக்கியத்துவம் குறைவடைந்து காணப்படுகின்றது. எங்களுடைய அரசாங்கத்தினூடாக தயார் செய்யப்பட்ட காணி உறுதிப் பத்திரங்களை, ஹட்டன் - தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் வைத்து தற்போதைய அரசாங்கத்தைச் சார்ந்த அமைச்சர்கள் வழங்கி வைத்தனர்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நான்கு சட்டத் திட்டங்களை மாத்திரம் அமல்படுத்தியுள்ளது. அதில் ஒன்று வரவு-செலவு திட்டமாகும்.

நாட்டில் ஆட்சிகள் மாறும் தலைவர்கள் மாறுவார்கள் ஆனால், மலையகத்தில் என்றுமே இ.தொ.கா.மாறாது ஏன்னெனில், நாங்கள் என்றும் உங்களுடன் இருக்கின்றோம்.

எம்மிடம் உள்ள குறைபாடுகளைத் திருத்திக்கொள்ள முயற்சியினை மேற்கொண்டுள்ளோம். மலையக தலைவர்களின் சிந்தனைகள் மாறவேண்டும் மக்கள் வாக்களித்தால் வீட்டுத் திட்டம் வருமென்பது மக்கள் செய்யும் தவறாகும்.

தலவாக்கலையில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தின்போது, இளைஞர்களின் மத்தியில் வெறுப்பு தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி கருத்து தெரிவித்தார். மலையகத்திற்கு வருகின்ற அமைச்சர்கள் வறுமை குறித்துப் பேசப்படுகின்றமையால் எதிர்கால சந்ததியினர் தன் நம்பிக்கையை இழந்து விடுகின்றனர் ” என குறிப்பிட்டார்.

# இரு கழுத்துகளை அறுத்த தந்தை

தன்னுடைய 12 வயதான மகளின் கழுத்தை அறுத்த, அவருடைய தந்தை, தனது கழுத்தையும் அறுத்து கொண்ட சம்பவம், தியத்தலாவ, கொஸ்லாந்த பெட்டிக்கல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வெளிநாட்டில் பணிப்பெண்ணாக பணிபுரியும் தன்னுடைய மனைவிக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தபோது, இருவருக்கும் இடையில், கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த 29ஆம் திகதியன்று ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்தே, 12 வயதான மகளின் கழுத்தை அறுத்துள்ளார். அதன் பின்னர், தன்னுடைய கழுத்தையும் அறுத்து கொண்டுள்ளார்.

கடுமையான காயங்களுக்கு உள்ளான இருவரும், தியத்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என லியங்காவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற போது, ஆறு வயதான சிறுவனும் அந்த வீட்டில் இருந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக, இன்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர், அவருடைய மனைவி வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாக சென்றுள்ளார். அதன்பின்னர், இவ்விருவருக்கும் இடையில், தொலைபேசியில் அவ்வப்போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் கடுமையான காயங்களுக்கு உள்ளான தந்தை, மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர், அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவருடைய நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக பண்டாரவளை லியங்கஹவெல பொலிஸார் கூறியுள்ளனர்.

# மின்னுயர்த்தி விழுந்ததில் இளைஞன் பலி

காலி, பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள கட்டிடத்தின் மின்னுயர்த்தி (Lift) உடைந்து விழுந்ததில் குறித்த வணிக வளாகத்தில் பணிபுரிந்த இளைஞன், பலத்த காயமடைந்து காலி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் செவ்வாய்க்கிழமை (29) உயிரிழந்துள்ளார்.

அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தரைதளத்தில் இருந்து மூன்றாவது மாடிக்குப் பொருட்களை ஏற்றிச் சென்றபோது, மூன்றாவது மாடியில் உடைந்த மின்னுயர்த்தி (Lift) கீழ் தளத்தில் இருந்த இளைஞன் மீது விழுந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# அரசியல் கட்சிகளின் பிடிக்குள் சிக்கிக்கொண்ட உழைப்பாளர் தினம்

வருடம் முழுதும், 'மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும்' தொழிலாளர்கள், தங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக, உரத்துக் குரல்கொடுக்கும் தினமான உழைப்பாளர் தினம் (மே 1), பல கோரிக்கைகளுடன் இன்று(01) உலகளவில் கொண்டாடப்படுகின்றது.

சிக்காகோ தியாகிகளின் தியாக தினமான 'மே தினம்' உழைப்பாளிகளின் ஆற்றலின் தேவையை உணர்த்தவும் போற்றவும் வேண்டிய தொழிலாளர்களின் எழுச்சிமிக்க மே 1ஆம் நாள், உண்மையான நோக்கத்திலிருந்து கடந்த காலங்களில் தலைகுப்புற விழுந்துவிட்டது.

மே தினக் கொண்டாட்டங்கள் பலமுறை தவிர்க்கப்பட்டன. எமது நாட்டைப் பொறுத்தவரையில் இது முதற்றடவையல்ல. 1965ஆம் ஆண்டு அரசாங்கம் மே தினத்தைத் தடை செய்தது. 1987ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று புறக்கோட்டையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலை அடுத்து, மே தினக் கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டன.

2018ஆம் ஆண்டு மே 1ஆம் திகதி, வெசாக் போயா தினம் என்பதால், மகாநாயக்கர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஆறு நாள்களுக்குப் பின்னரே, மே தினக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தொழிலாளர்களின் தினத்தில் இவ்வாறு பல, முன், பின் ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரையிலும், கடந்த சில ஆண்டுகளாக, மே 1 மௌனித்தது.

இலங்கையை பொறுத்தவரையில், தொழிலாளர்களின் பாடு, பெரும் திண்டாட்டமாகவே உள்ளது. பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் அரசாங்கத்துக்கு, அழுத்தம் கொடுப்பதென்பது இயலாத காரியமாகும். அதைச் சாதகமாகப் பயன்படுத்தி, தொழிலாளர்களைத் தொடர்ந்தும் வஞ்சிக்காது, அவர்களையும் ஏறெடுத்துப் பார்க்கவேண்டும் என்பதே, எங்களது வலியுறுத்தலாகும்.

தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளாகிவிட்டன. இல்லையேல், அரசியல் கட்சிகளுடன் சங்கமித்துவிட்டன. இதனால், தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள் அரசியல் கோரிக்கைகளாகிவிட்டன. இது, அரசாங்கத்துக்கு பாரியளவில் அழுத்தம் கொடுப்பதாய் இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், அரசியல் சாயம் பூசப்பட்டுவிடுமாயின், உரிமைக் குரல்கள் மௌனித்துவிடும். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியின், மே 1 ஊர்வலமும் கோரிக்கையும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பவையாக கடந்த காலங்களில் அமைந்திருந்தன. எனினும், அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியானதன் பின்னர் முதலாவது மே தினம் கொண்டாடப்படுகின்றது. ஆகையால், எதிர்க்கட்சிகளின் மே.தின கூட்டங்களும் பேரணிகளுமே புதிய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பவையாகக் இருக்கவேண்டும்.

நமது நாட்டை பொறுத்தவரையில், ஒருசில தொழிற்சங்கங்கள் மட்டுமே, அரசியல் கலப்படமில்லாது இருக்கின்றன. ஏனைய தொழிற்சங்களுக்கு பின்னால், அரசியல் இருக்கும். அவ்வாறான தொழிற்சங்கங்கள், அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாகப் பம்மாத்து காட்டிக்கொண்டிருக்கும். இல்லையேல், உரிமை குரல்களைக் கொடுக்கும் தொழிற்சங்கங்களின் போராட்டங்களை காட்டிக்கொடுக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும். வென்றெடுக்கப்பட்ட தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே எமது குரலாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# 'சாட்சிகளை அழிக்கும்' படுகொலைகள் இடம்பெறுகின்றனவா?

**முருகானந்தம் தவம்**

இலங்கையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடம் ஏறியது முதல், நாட்டில் அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களையும் அதில் கொல்லப்பட்டவர்களையும் வெறுமனே பாதாள உலகக் குழுக்களுடனும் போதைவஸ்து வர்த்தகத்துடனும் மட்டும் தொடர்புபடுத்தி கடந்து போக அரசு முயற்சிப்பதாகவே தெரிகின்றது. ஆனால், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் படுகொலைகளும் இவற்றுக்கு அப்பால் அரசியல் மற்றும் சாட்சியங்கள் அழிப்புகளுடன் தொடர்புபட்டுள்ளமையாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இன்று வரையான நான்கு மாத காலப்பகுதியில் 40க்கு மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளன. இந்த துப்பாக்கிச் சூடுகளில் இதுவரை 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 25 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டவை என்றும் ஏனைய சம்பவங்கள் தனிப்பட்ட விரோதம் காரணமாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் என்றும் கூறப்பட்டாலும் இந்தப் படுகொலைகளில் சிலவற்றின் பின்னணியில் அரசியல் உள்ளமை அனைவருக்கும் தெரிந்த இரகசியமாகவுள்ளது.

இவ்வாறான படுகொலைகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமாக இருந்த அருண விதாகனகே மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துடன் நெருக்கமான டேன் பிரியசாத் ஆகியோரின் படுகொலைகள் அரசியல் படுகொலைகளாகவும் சாட்சியம் அழிப்பு கொலைகளாகவும் இருக்கலாம் என்ற சந்தேகங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியுள்ளன. அருண விதாகனகே, டேன் பிரியசாத் ஆகியோர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களாக இருந்த நிலையிலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது பல்வேறு வழக்குகள், விசாரணைகள், குற்றச்சாட்டுகள் இருப்பதால் இவர்களுக்கும் பாதாள உலகக் குழுக்களுக்குமிடையில் தொடர்புகள் இருக்கலாம். அதனால் அவர்களுக்கிடையிலான முரண்பாடுகளினால் இக்கொலைகள் இடம்பெற்றிருக்கலாம் என பாதுகாப்புத் தரப்புக்களினால் தெரிவிக்கப்படுகின்றபோதும், இவர்கள் இருவரும் சில குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட சில தினங்களிலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளமை தான் பல்வேறு சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது.

'மித்தெனிய கஜ்ஜா' என அழைக்கப்படும் அருண விதான கமகே கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி மித்தெனிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார். அந்த சம்பவத்தில் அருண விதான கமகேயுடன் அவரது 2 குழந்தைகளும் கொல்லப்பட்டனர். மஹிந்த ராஜபக்ஷவின் விசுவாசியான இவர், பல்வேறு கொலைகள், குற்றங்களுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர். அருண விதான கமகே 'அரகலய' ஆர்ப்பாட்டத்தில் மூவரைக் கொலை செய்த குற்றச்சாட்டுக்குமுள்ளானவர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில், இவர் கொல்லப்படுவதற்கு ஓரிரு சில தினங்களுக்கு முன்னர், சமூக ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில், ராஜபக்ஷக்களின் பல இரகசியங்களை அறிந்து வைத்துள்ளதால் தான் எவ்வேளையிலும் கொல்லப்படலாம் என கூறியிருந்தார். அதேபோன்றே அவர் ஓரிரு தினங்களுக்குள் படுகொலை செய்யப்பட்டார்.

அடுத்ததவரான டேன் பிரியசாத் படுகொலையும் இதே பின்னணியைக் கொண்டதாகவே இருக்கின்றது. இவரும் ராஜபக்ஷக்களுடன் நெருங்கிய தொடர்புள்ளவர். 'அரகலய' போராட்டம் மீது தாக்குதல் நடத்தியவர்களில் முக்கியமானவர். 2017ஆம் ஆண்டு ரோஹிங்கிய முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் முக்கியமானவர். 2018ஆம் ஆண்டின் திகன இனக் கலவரத்தின் முக்கிய சூத்திரதாரியாக இருந்தவர், முள்ளிவாய்க்கால் படுகொலைகள், யுத்தத்தில் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் குழப்பம் விளைவித்தவர். இவர் ஒரு மிக மோசமான இனவாதி.

'நவ சிங்கள தேசிய இயக்கத்தின்' ஒருங்கிணைப்பாளரான இவரை, மஹிந்த ராஜபக்ஷவின் மொட்டுக் கட்சியினர் சமூக செயற்பாட்டாளர் என அழைப்பதுடன், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமது கட்சி வேட்பாளராகவும் நிறுத்தியுள்ள நிலையிலேயே கடந்த 22ஆம் திகதி மாலை வெல்லம்பிட்டியில் உள்ள 'லக்சந்த செவன' வீட்டுத்திட்ட வளாகத்தில் வைத்து இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரும் சில குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட ஓரிரு தினங்களிலேயே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தியிருக்கும் பின்னணியில் சுட்டுக்கொல்லப்பட்ட அருண விதான கமகே, டேன் பிரியசாத்திற்கு இந்தத் தாக்குதல்கள் குறித்த தகவல்கள் தெரிந்திருக்கலாம் என்ற சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. இதனால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பது வெளிப்பட்டு விடும் என்பதால் இவர்கள் 'ஒப்பந்த கொலைகாரர்கள்' மூலம் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பல குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்துள்ள மித்தெனிய கஜ்ஜா என்றழைக்கப்படும் அருண விதான கமகே, டேன் பிரியசாத் ஆகியோர் ராஜபக்ஷக்களிற்கு ஆதரவாகவே செயற்பட்டு வந்துள்ளனர். அவர்களுக்காவே பல குற்றங்களிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்விருவரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு விசாரணைகளுக்கு அழைக்கப் பட்டு விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் எவ்வேளையிலும் கைதாகலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்த சூழலிலேயே இருவரும் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரினது படுகொலைகளில் இருபக்க குற்றச்சாட்டுக்கள் உள்ளன. ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமான இவர்கள் பல்வேறு கொலைகள், குற்றங்களில் ஈடுபட்டுள்ள நிலையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு இவர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதால், இவர்கள் கைதானால் ராஜபக்ஷக்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள், இரகசியங்கள் வெளியாகும் என்ற அச்சத்தால் இவ்விருவரும் 'ஒப்பந்த கொலைகாரர்கள்' மூலம் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதன்மூலம் ராஜபக்ஷக்களின் இரகசியங்கள் தெரிந்த சாட்சியங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பது ஒரு பக்க குற்றச்சாட்டு.

இவர்கள் இருவரும் ஜே.வி.பியின் பின்னணியில் இடம்பெற்ற 'அரகலய' போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்கள், அருண விதானகமகே 'அரகலய' ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் மூவரைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டுக்குள்ளானவர். டேன் பிரியசாத் கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்று வந்த 'அரகலய' போராட்டத்தின் மீது கொடூரமான தாக்குதலை நடத்தியவர்களில் மிக முக்கியமானவர். ஆக, தற்போது ஜே.வி.பியே தேசிய மக்கள் சக்தியாக ஆட்சியில் இருக்கும் நிலையில், போராட்டக்காரர்களை கொன்றவரும் போராட்டத்தின் மீது கொடூரத் தாக்குதலை நடத்தியவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளமை ஒரு அரசியல் பழிவாங்கல் படுகொலை என்பது மற்றைய பக்க குற்றச்சாட்டு.

பாதாள உலகக் குழுக்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவினர் என பலரும் கடந்த காலங்களில் அரசியல்வாதிகளுடனும் அரசியல் கட்சிகளுடனும் தொடர்புகளைப் பேணி வந்தனர். அரசியல்வாதிகளும் தமது அரசியல் தேவைகளுக்காக அவர்களைப் பயன்படுத்தியிருந்ததுடன், சட்டத்தை நிலைநாட்டும் தரப்பினர்களால் அவர்களுக்கு ஆபத்து ஏற்படாதும் பாதுகாத்து வந்தனர். எனினும், தற்பொழுது ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசு எவருக்கும் அஞ்சாது நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவிட்டுள்ள நிலையிலேயே தமது கடந்தகால நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் தற்பொழுது வெளிவந்துவிடும் என்ற அச்சத்தினால் இதுபோன்ற 'சாட்சிகளை அழிக்கும்' படுகொலைகள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகம் வலுத்துள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

அச்சம், பயம் சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், சதா மனம் குழம்பியப்படியே இருப்பது சஞ்சலம். பயம், சில சந்தர்ப்பங்களில் எவருக்கும் நேரலாம். ஆனால், எல்லா விடயங்களுக்கும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும்.

சில விடயங்களில் நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டிற்குச் செல்லும்போது அவனை மறித்து உபதேசம் செய்யலாகாது. இது அச்சமற்ற செயல் அல்ல. வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுக்கலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். அது கோஷ்டிச் சண்டையாகவும் மாறிவிடலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான். ஒருவரை வலிந்து தொடர்ந்து இம்சித்தால், அவன் சிங்கம் போல எழுந்து தாக்கி வீழ்த்திவிடுவான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள் அச்சத்தைத் துச்சமாக்கி விடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது. முன்னேற்றத்தை இது உருவாக்கும்.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### அசுத்தமான சூழல்

கிளிநொச்சி-பளை பேருந்து தரிப்பிடத்தில் உள்ள பொது மலசலக் கூடமானது பராமரிப்பின்றி அசுத்தமாகக் காணப்படுவதால் பேருந்து தரிப்பிடம் முழுவதும் துர்நாற்றம் வீசிய வண்ணம் உள்ளது.

மலசலக் கூடத்தின் பின்புறத்தில் கழிவு நீர் தேங்கியுள்ளதால், மரங்கள் புற்கள் அதிக அளவில் வளர்ந்து நுளம்புகள், பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், அப்பகுதிகளில் ஈக்கள் அதிக அளவு காணப்படுவதால், மரக்கறி சந்தை, மீன் சந்தையிலுள்ள வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கையில் அசௌகரியம் ஏற்படுகின்றது.மேலும், கொள்வனவாளர்கள் வியாபாரப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, ஈக்கள் நிற்பதால் அசுத்தமான பொருட்கள் என மரக்கறி, மீன்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய அச்சப்படுகின்றனர்.

மற்றும் மீன் சந்தையின் கழிவுகளும் அங்கங்கே காணப்படுவதால் அதில் இருந்தும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர்

இதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச சபை பல தடவை தமக்கு வாக்குறுதி கொடுத்தும் தாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருவதாகவும் பிரதேச சபையில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

மேலும் பொதுச் சந்தை கட்டடத் தொகுதியின் நடுப்பகுதியில் தற்பொழுது பெய்த மழை காரணத்தால் நீர் தேங்கி நிற்பதுடன், சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் இது நீரினால் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பு.கஜிந்தன்

# “சகோதரத்துவத்துடன் ஒன்றிணைவோம்”

இலங்கையின் உழைக்கும் மக்கள் உட்பட பொது மக்கள், இந்த முறை இந்நாட்டின் ஊழல் மிக்க, சிறப்புரிமை அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள் நேய ஆட்சியின் கீழ், நாடும் சமூகமும் ஆழமான, சாதமான மாற்றத்துடன் சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அனுப்பி வைத்துள்ள மே தினவாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



1886 மே மாதம் 01ஆம் திகதி அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஹேமார்க்கெட் சதுக்கத்தில், 08 மணி நேர வேலை நேரத்தைக் கோரி போராட்டம் நடத்தியபோது இடம்பெற்ற அடக்குமுறை துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் இரத்தம் சிந்திய தொழிலாளர்களை நினைவுகூரும் வகையில், 1889ஆம் ஆண்டு கூடிய இரண்டாவது கம்யூனிச சர்வதேசம், அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 01ஆம் திகதியைச் சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்த முடிவு செய்தது. ஒரு சில குடும்பங்கள் மற்றும் பரம்பரைகளால் 76 ஆண்டுகாலமாக மேற்கொள்ளப்பட்ட ஊழல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்நாட்டின் அரசியலில் குறிப்பிடத்தக்கத் திருப்புமுனையைக் குறிக்கும் வகையில், கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இன, மத வேறுபாடின்றி இந்நாட்டின் அனைத்து மக்களும் செயல்பட்டனர்.

அந்த மக்கள் ஆணையின் அபிலாஷைகளை உணர்ந்து, நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியான திருப்பத்தை ஏற்படுத்துவதற்காகத் தேசிய மக்கள் சக்தி செயலாற்றுகிறது. ஊழல் நிறைந்த, சிறப்புரிமை அரசியல் முறைமையால் பாதாளத்திற்குள் தள்ளப்பட்ட இந்நாட்டின் பொருளாதாரத்தை, மீட்டெடுத்து நிலையான ஆரம்பத்தை ஏற்படுத்துவதில் தற்போது நாம் வெற்றி பெற்றுள்ளோம். இதன் தெளிவான அறிகுறிகள் இப்போது அனைவருக்கும் தெரிகின்றன.

அரசாங்கத்தின் முதல் வரவுசெலவுத்திட்டத்திலேயே வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தமை உட்பட விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் மாணவர்கள் மாத்திரமன்றி, உற்பத்தியாளர்கள், சிறிய வர்த்தகர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபடுபவர்கள் உட்பட சமூகத்தின் அனைத்து தரப்பினர்களுக்கும் நன்மைகளை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று, தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களின் குடியுரிமை உரிமைகளை உறுதி செய்வதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

நாளாந்தம் மாறிவரும் உற்பத்தி அற்றலுக்கு ஏற்ப நாம் அனுபவிக்கும் உரிமைகளில் ஒரு புதிய அத்தியாயத்தின் அவசியத்தை நாங்கள் காண்கிறோம். 1948 மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலில் இல்லாத டிஜிட்டல் பிரவேச உரிமைகள், சுற்றுச்சூழல் உரிமைகள் உள்ளிட்ட மாறிவரும் அரசியல் கட்டமைப்புகளின் தோற்றம் மற்றும் உலக அமைதியை அடிப்படையாகக் கொண்ட புதிய அபிவிருத்தித் தேவைகளுக்கமைய உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தை இன்றைய சமூக கோருகிறது. இது குறித்த புரிதலுடன், தலையீடு செய்ய வேண்டியதன் அவசியத்தைச் சர்வதேச தொழிலாளர் தினமான இந்த சந்தர்ப்பத்தில், நாம் மீண்டும் நினைவூட்டுகிறோம்.

சர்வதேச புவிசார் அரசியல் மாற்றங்கள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இந்த நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதி செய்து, ஊழல் நிறைந்த சிறப்புரிமை அரசியலால் அழிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி “வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கை” உருவாக்கச் சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து போராட இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கு அழைப்பு விடுப்பதுடன் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அர்த்தமுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்திற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# “ஒன்றிணைந்து உழைப்போம்”

உழைக்கும் மக்களின் வியர்வை, இரத்தம் மற்றும் உயிர்த் தியாகங்கள் நிறைந்த வேதனையான வரலாற்றை முடிவுக்குக் கொண்டு வந்து, ஒரு வெற்றி ஆண்டில் ஒரு மக்கள் அரசாங்கத்தின் கீழ் 139ஆவது சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறோம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய மே தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



மேலும், எழுபத்தைந்து ஆண்டுகளாக ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து நின்று ஊழல் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்த மக்கள் அரசாங்கத்தின் கீழ், இந்த ஆண்டு தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது ஒரு வரலாற்று மைகல்லைக் குறிக்கிறது. குழு வாதம், அரசியல் பக்கச்சார்புகள் மற்றும் உறவினர்களுக்குச் சலுகை அளித்தல் போன்றவற்றால் அநீதிக்குள்ளான உழைக்கும் மக்கள், 2024 ஆம் ஆண்டில் இந்த முழு அரசியல் கலாசாரத்தையும் தலைகீழாக மாற்றும் ஒரு சவாலான முடிவை எடுத்தனர். இது படுகுழிக்கு இழுத்துச் செல்லப்பட்டிருந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு துணிச்சலான நடவடிக்கையாகும்.

ஒரு மக்கள்நேய அரசாங்கமாக, மக்களின் தேவைகளை மிகச் சரியாக அடையாளம் காணவும், சீர்குலைந்த பாதையில் பயணித்துக்கொண்டிருந்த பொருளாதார, அரசியல், சமூக, கலாசார மற்றும் சட்ட கட்டமைப்பை சரியான பாதைக்கு மீட்டெடுப்பதற்காக நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம். பல ஆண்டுகளாக இந்த நாட்டைப் பாதித்து வரும் ஊழலையும் அநீதியையும் ஒரே இரவில் மாற்ற முடியாது என்றாலும், அரசாங்கம் படிப்படியாக எல்லாவற்றையும் நெறிப்படுத்தி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கட்டமைப்பு மாற்றங்களைச் செய்து வருகிறது.

அரச, தனியார், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட அனைத்து உழைக்கும் வர்க்கத்தின் பொருளாதார சக்திகளையும் வலுப்படுத்த அரசாங்கம் ஒரு முறையான வேலைத்திட்டத்தைத் தயாரித்துள்ளதுடன், நாட்டை தன்னிறைவு பெறச் செய்வதில் முன்னணியில் இருக்கும் விவசாய சமூகத்தை வலுப்படுத்தவும் தயாராக உள்ளது.

மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், மிகவும் ஸ்திரமான மற்றும் நம்பகமான எதிர்காலத்தை அடைவதற்கு நாம் ஒன்றிணைந்து நம்மை அர்ப்பணிக்க வேண்டிய ஒரு காலகட்டத்தை நாம் கடந்து செல்கிறோம். நாம் வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாத்து, நாட்டைக் கட்டியெழுப்ப உறுதியுடன் ஒன்றிணைந்து உழைப்போம் என்றார்.

# “உரிமை குரல் ஒலிக்கும்”

இலங்கை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காளியாகத் திகழும் எமது பெருந்தோட்டத்துறை சார்ந்த தொழிலாளர்கள் மாத்திரமன்றி, தலைநகரிலும் தமது பொருளாதார வளர்ச்சிக்காக அர்ப்பணிக்கும் அனைவருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் மே தின வாழ்த்துகளில் தெரிவித்துள்ளார்.



இலங்கையின் சுதந்தரத்திற்குப் பின்னரான வரலாற்றை எடுத்து நோக்கினால், நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பங்களிப்பானது இன்றியமையாததாகவே காணப்படுகின்றது.

ஆகவேதான் நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமது முன்னேற்றத்திற்காகவும் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் இனிய மே தின வாழ்த்துக்கள்.

வர்க்கப் போராட்டங்களின் வரலாறு தான் மனிதகுல வரலாறு” என்கிறார் பேரறிவாளர் காரல் மார்க்ஸ். அந்த வகையில் தொழிலாளி வர்க்கம் 1886 ஆம் ஆண்டில், அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் உழைக்கும் மக்கள் அமைப்புரீதியாக அணி திரண்டு வேலை நேரத்தை முறைப்படுத்தும் கோரிக்கைகளை முன் வைத்து மே முதல்நாள் ஊர்வலம் நடத்தியது. 8 மணிநேரம் உழைப்பு, 8 மணிநேரம் ஓய்வு, 8 மணிநேரம் உறக்கம் என்பதாக வரையறுத்து கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

நாள்தோறும் 20 மணி நேரம் வரையிலும் வேலை வாங்கி வந்த, மூலதன சக்திகளும், அவர்களது அரசும், காவல்துறையும், கோரிக்கை வைத்து ஊர்வலம் போன தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது. தொழிலாளர்களை அணிதிரட்டி முன்னணி தலைவர்களைத் தூக்கில் போட்டு, படுகொலை செய்தது. இதன் இறுதி விளைவாக ஆண்டுதோறும் உலகளாவிய ரீதியில் மே 1ஆம் திகதி மே தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்களின் வெற்றிக்காகத் தொழிற்சங்க தலைவர் என்றவகையில் குரல் கொடுத்திருக்கின்றேன். தொடர்ந்து எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க எனது குரல் ஒலிக்கும்.

இன்றைய மே தின நாளில் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் மே தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# மீண்ட சொர்க்கம்

ஷெல்லிதாசன்



எனது வீட்டுக் கூடத்தின் சுவரில் நடுநாயகமாக அந்த அழகிய ஓவியம் மாட்டப்பட்டிருந்தது. நான் படுக்கைவிட்டு எழுந்து கதவைத் திறந்து வெளியே வரும்போது அந்த ஓவியத்தை தரிசித்தபின்பே எனது நாளாந்த நகர்வுகள் தொடங்கும். அப்படியொரு நீண்ட வரலாற்றுப் பிணைப்பு எனக்கும் அந்த ஓவியத்துக்குமுண்டு. ஆனால்....இன்று அது அங்கே இல்லை என்பதை எண்ணும்போது எனது நெஞ்சுக்குள் ஏதோ செய்தது. அது மாட்டப்பட்டிருந்த சுவர் வெடித்து சிதிலமாகி காரைகளெல்லாம் உதிர்ந்து கொட்ட வெறுமையாக இருந்ததுபோல எனது இதயமும்.

வெறுமையாக இருந்தது.அந்த ஓவியத்துக்கு வாயிருந்தால் எங்கள் குடும்பச் சரித்திரத்தையே விலாவாரியாகச் சொல்லும் அந்தளவிற்கு அது எங்கள்

ஒன்றிக்கலந்ததென்றால் மிகையான கூற்றல்ல.

எனது அம்மா அப்பாவின் திருமணப்பரிசாகக் கிடைத்த பொக்கிஷமது. எனக்கே இப்பொழுது வயது அறுபதைத் தாண்டிவிட்டது.

எனது தாய் தந்தைக்குக் கிடைத்த திருமணப்பரிசு அது என்பதனால் வீட்டின் சுவரின் நடுநாயகமாக அந்த ஓவியத்தை மாட்டிவைத்து மிக கவனமாக பராமரித்து வந்தோம். கிட்டத்தட்ட மூன்றடி உயரமும், இரண்டரையடி அகலமும் கொண்ட ஓவியமது. கண்ணாடியில் வண்ணங்களால் மிக நுட்பமான விதத்தில் அது வரையப்பட்டதனால் காலத்தை வென்று மங்காது காட்சிகொடுத்து வந்தது.

எங்கள் அப்பா ஒரு கலை இலக்கிய இரசிகர் மாத்திரமல்ல ,ஓர் படைப்பாளியும் கூட. அம்மாவும் அதற்கு ஈடுகொடுப்பது போல, ஓவியக் கலையில் தேர்ந்தவர். ஓவியத்துறையில் ஒரு பட்டதாரியும், ஆசிரியருமாகும். அவரிடம் பயின்ற பலர் இன்று சிறந்த ஓவியர்களாகத் திகழ்வது எமக்குப் பெருமையே.

எங்கள் அம்மா, நூல்கள் வாசிப்பதிலும் சலிக்காதவள். அதுமாத்திரமல்ல, அம்மாவுக்கு அந்த நாளையில் வந்துகொண்டிருந்த கல்கி, குமுதம், ஆனந்தவிகடன், அமுதசுரபி, கலைமகள் போன்ற தமிழ்நாட்டு சிற்றிதழ்களில் ஓவியம் வரையும் ஓவியர்களான மணியம், லதா, மாருதி, சுஜாத்தா, சிற்பி, கோபுலு போன்றவர்களின் ஓவியங்கள் மிகவும் பிடித்தமானவை. பொன்னியின் செல்வன், பார்த்திபன் கனவு, கடல்புறா, ஜவனராணி,குறுஞ்சிமலர் போன்ற தொடர்கதைகளை வாசிப்பதைவிட, அந்தக்கதைகளில் வரும் கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டி ஓவியர்களால் வரையப்பட்ட ஓவியங்களை ரசிப்பதில் அலாதிப்பிரியம் அம்மாவுக்கு. இலங்கை பத்திரிகைகளில் அந்நாளையில் கதைகளுக்கு ஓவியம் வரைந்த வீ.கே.ரமணி, சிரித்திரன் சுந்தர் போன்றவர்களின் ஓவியங்களையும், மேலைத்தேய நவீன ஓவியங்களையும் ரசிக்கத் அம்மா தவறுவதில்லை.

இப்படி ஓவியக்கலையில் ஊறித்திளைத்த அம்மாவுக்கு எங்களது அம்மப்பா திருமணப் பரிசாக அந்த ஓவியத்தை பரிசாக வழங்கியது இந்த உலகத்தையே திருமணப் பரிசாக வழங்கிய பேரானந்தமாக இருந்ததாம். எங்கள் அம்மப்பா அந்த நாளையில் சிங்கப்பூரில் வசித்து வந்ததால், அம்மா, அப்பாவுக்கு அங்கேயே மிக விமர்சையாக திருமணம் நடந்தேறியதாம். அம்மப்பாவும் கலைகளை இரசிப்பதில் முதல் தரமானவர். எங்கேயாவது அழகிய ஓவியத்தைக் கண்டுவிட்டால், அது என்னவிலையானாலும் கொடுத்து வாங்கிவந்து வீட்டில் மாட்டிவிடுவார்.மொனாலிசா ஓவியம் முதல் பல சிறந்த ஓவியங்களாலும் அவர் கவரப்பட்டவர். அவரது ஓவியக்கலையார்வம் அம்மாவிலும் தொற்றிக்கொண்டதில் ஆச்சரியமில்லை.

அம்மாவுக்கு திருமணப்பரிசாக எதைக் கொடுத்தால் பொருத்தமாக அமையுமென அறிந்த அப்பப்பா, சிங்கப்பூரிலுள்ள ஒரு கலைக்கூடத்திற்குப்போய் ஒரு விலைமதிப்பற்ற ஓவியத்தை பல இலட்சங்களைக் கொடுத்து வாங்கிவந்து அம்மாவுக்கு திருமணப் பரிசாக கொடுத்து அவரை ஆச்சிரியத்தில் மூழ்க வைத்தார். அம்மாவுகும் தனக்கு எதிர்பாராதவாறு அப்படியானதொரு அற்புதப் பரிசு கிடைத்ததை தமது திருமணத்துக்குக் கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகவே கருதி குதூகலித்தார்.

சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பி வந்த அம்மா, முதல் முதலில் செய்த வேலை தனது தந்தை தனக்கு கொடுத்த அந்த அற்புத ஓவியத்தை தனது வீட்டின் விறாந்தையிலுள்ள சுவரில் மாட்டிவைத்து அதை, புதுமணத் தம்பதிகளான தம்மைப் பார்க்கவந்த தனது,தோழிகள் உற்றார் உறவினர்களுக்கும் காட்டி மகிழ்ச்சி கொண்டார் என நான் வளர்ந்துவந்தபின் அதை அறிந்து கொண்டேன். அவ்வளவுக்கு அந்த ஓவியத்தின் மேல் அம்மாவுக்கு உயிர்.

யாழ்ப்பாணம், இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காலம்கட்டம் அது. பலாலி வீதி, கந்தர்மடப் பக்கம் இந்தியன் ஆமியின் கெடுபிடிகள் அதிகமாக இருந்தது. இயக்கப் பெடியளுக்கும் சமாதானப் படைக்கும் இருந்திருந்தாற்போல மோதல்கள் இடம்பெற்றவண்ணமிருக்கும்.

திடீரென ஒரு நாள் அந்திசாய்ந்து பூமி இருளில் மூழ்கிக்கொண்டிருந்த வேளை, பாரிய வெடிச் சத்தத்தால் ஊரே அதிர்ந்து. கண்ணிவெடியொன்று எங்கள் வீட்டுக்கு முன்னால் உள்ள பலாலி பிரதான வீதியில் முழங்கி எம்மையெல்லாம் அச்சத்தில் மூழ்கவைத்தது. கண்ணிவெடியின் அதிர்வால் அயலிலுள்ள பல வீடுகள் உடைந்து சேதமாகி நொருங்கவிழுந்தன.. எங்களது வீடு எங்கள் அப்பப்பாவின் அப்பாவால் கட்டப்பட்ட ஓடுகளால்வேயப்பட்ட பழைய நாற்சார் வீடு. சுவர்கள் ஒவ்வொன்றும் குறைந்தது ஒன்றரை அடி அகலம் கொண்ட சுண்ணாம்புச் சுவர். சாமியறைக் கதவுடன், ஏனைய கதவுகளும் அரையடி தடிப்பன் கொண்ட அழகிய வேலைப்பாடுகளுடன்கூடிய தேக்கங் கதவுகள். அவறிற்குரிய சாவிகள் ஒவ்வொன்றும் சுமார் பத்து அங்குல நீளமான பித்தளைச் சாவிகள். பழைய வீடாயினும் இன்னும் உறுதிகுன்றாது வீடாக காட்சியளித்தது. ஆனால், அன்று வெடித்த கண்ணிவெடியின் அதிர்வுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது பல சுவர்கள் வெடித்து பொலபொலவென உடைந்து விழுந்தன. சாமியறைப் பகுதிக் கூரையும் பலத்த தாக்கமடைந்து உடைந்து மரங்கள் ஓடுகள் என்பன சிதறிக் கீழே விழுந்தன. அந்தவேளை, நான் சாமியறையில் சாமிகும்பிட்டுக்கொண்டு நின்றிருந்தேன். ஆனால் என்னைச் சுற்றி ஓடுகள் மரங்கள் என்பன நொருங்கி விழுந்தனவேயன்றி நான் தப்பித்துக் கொண்டது நல்லூர் கந்தனின் அருள்தானென நினைத்து நல்லூரானின் கோவிலை நோக்கி தொழுது அசையாமல் நின்றேன். அதேவேளை, தற்செயலாக எனது வீட்டுக்கு வந்து முன் விறாந்தையில் நின்ற எனது தம்பி குண்டு வெடிப்பின் அதிர்வலையால் முற்றத்துக்கு தூக்கி வீசப்பட்டான். குண்டு வெடிப்பையடுத்து ஒரு மணி நேரமாக பலத்த வேட்டுச்சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. வீட்டில் நின்றால் இராணுவம் வீடு புகுந்து எம்மையும் தாக்கக்கூடுமென்பதால், போட்டது போட்டபடி அப்படியே அனைத்தையும் விட்டுவிட்டு காயமடைந்த தம்பியுடன், நானும் கணவரும் மணல்தறை லேன் வழியாக எனது தம்பியின் வீட்டுக்குச் சென்றடைந்தோம். தம்பி பலத்த காயமடைந்திருந்ததால் அவனை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்தோம்.

அடுத்த நாள் நிலைமை சற்று ஓய்ந்திருந்தவேளை வீட்டுக்கு வந்ததோம். ஆனால், வீட்டில் பல சுவர்கள் வெடித்துச் சிதறிய நிலையில் நாலாதிசையிலுமுள்ள கூரைகளும் உடைந்து எங்கும் மரங்களும் ஓடுகளுமாய் காட்சிகொடுத்தது. இருந்தும், எனது கண் நான் விறாந்தைச் சுவரில் கொளுவிவைத்திருந்த ஓவியத்தைத்தான் தேடியது. ஒரே ஏமாற்றம். அந்த ஓவியத்தைக் காணவில்லை. வீட்டில் பல பொருட்கள் திருடப்பட்டிருந்தன. எனது நகைகளுடன் உடுப்புகளும் கள்வர்களால் சூறையாடப்பட்டிருந்தன. எந்தப் பொருளும் களவுபோனதைப்பற்றி ஏனோ எனக்கு கவலை வரவில்லை.

ஆனால் எனது அம்மாவை நினைவூட்டியபடி இருந்த அந்த அழகோவியத்தை இழந்ததை என்னால் தாங்கமுடியவில்லை.

கால ஓட்டத்தில் வெளிநாட்டில் வசிக்கும் மகளின் உதவியுடன்,அவர்களின் விருப்பப்படி இடிந்து வீழ்ந்த பழைய வீட்டை முற்றாக அகற்றிவிட்டு புதிதாக நவீன வடிவில் ஒரு வீட்டை நிர்மாணித்துக் கொண்டோம். இருந்துமென்ன, அந்த அழகோவியம்

அற்ற வீடு வெறுமையான உணர்வையே எனக்கு தந்தது.

திடீரென ஒருநாள் மதியவேளை எங்கள் வீட்டு அழைப்புமணி ஒலித்தது. கதவைத் திறந்து வெளியே எட்டிப்பார்த்தேன். ஒரு இளவயதுப் பையன் நின்றுகொண்டிருந்தான். அவனது கைகளில் பலவிதமான படங்கள் சுருள் சுருளாக காணப்பட்டன. வெய்யிலுக்குள் அவன் வந்ததால் முகமெல்லாம் வியர்வை சிந்த அவன் காணப்பட்டான். “ எங்கே இருந்து நீ வருகிறாய் எனக் கேட்டேன்.” நான் யாழ்ப்பாண ரவுணில் இருந்து வருகின்றேன். படங்கள் விற்கும் ஒரு கடையில் வேலை செய்கிறேன். அந்தக் கடை முதலாளி தினமும் பிறேம் பண்ணுப்படாத சாதாரண படங்களை நூறு ரூபாவாகவும், பிறேம் பண்ணிய படங்களை ஆயிரம் ரூபாவாகவும் விலைபோட்டு விற்றுவரும்படி எனக்குத்தருவார். அவற்றை வீடுவீடாக சென்று எனக்கென்று ஒரு விலையை நான் தீர்மானித்து விற்றுவருவேன்.விற்று அவற்றால் வரும் பணத்தில் முதலாளிக்குரிய பணத்தைக் கொடுத்து மேலதிகமாக வரும் இலாபப்பணத்தை நான் எடுத்துக் கொள்வேன். ஒருநாளைக்கு ஆயிரமும் வரும் ஐந்நூறு ரூபாவும் வரும் என்றான். அவனின் நிலையைப் பார்க்க எனக்கு பரிதாபமாக இருந்தது. அதன்பின் அவன், இயற்கைக் காட்சிகள், பறவைகள், பூக்கள் உள்நாட்டு வெளிநாட்டு தலைவர்களின் படங்களென அவற்றை ஒவ்வொன்றாக விரித்துக் காண்பித்தான். ஆனால் நான் இழந்துவிட்ட அந்த அழகோவியம்போல எதுவுமே அமையவில்லை. அத்துடன் பிறேம் பண்ணப்பட்ட ஓவியங்களும் பலவும் அவனிடம் இருந்தன. அவை மிகவும் பக்குவமாக கடதாசிகளால் சுற்றப்பட்டிருந்தன. அவற்றையும் அவன் ஒவ்வொன்றாக பிரித்துக் காண்பித்துக்கொண்டிருந்தான். திடீரென ஓர் ஓவியத்தின் கடதாசித் தாள்களை அகற்றி அதனை எனக்குக் காண்பிக்க, நான் திகைத்தே போனேன். ஆமாம் நான் இழந்து பலகாலமாக தவித்த அந்த ஓவியம்...ஆமாம் அதேதான்...நிச்சயமாக. உடனடியாக

அதனை அவனிடமிருந்து வாங்கி அதன் பின் புறத்தை நோட்டமிட்டேன்.

அங்கே , “மணமக்களுக்கு எனது மனங்கவர்ந்த அன்புப் பரிசு” என எனது அப்பப்பா எழுதிய வாசகமும், அவரின் கையெழுத்தும், திகதியும் இடப்பட்டிருந்ததைக் கண்டு வியப்பிலே ஆழ்ந்துவிட்டேன். மேலதிகமாக அவனிடம் எந்தக் கதையுமின்றி “இந்தப்படம் என்னவிலை தம்பி” என்றேன். “ஆயிரத்து ஐந்நூறு ரூபா தாங்க அம்மா” என்றவனிடம், “என்ன ஆயிரத்து ஐந்நூறு ரூபாவா”?

“சரி நூறுரூபா குறைத்து ஆயிரத்து நானூறு தாங்க”என்றான் அவன்.

ஏதோ விலை குறைப்பதற்காக நான் அப்படிக் கேட்டதாக அவன் கருதியதாலேயே அவனது பதில் அப்படி வந்தது. ஆனால், ஒப்பற்ற அந்த ஓவியத்தின் விலை இவ்வளவுதானா என்பதுவாக எனது கேள்வி அமைந்ததென அவன் அறியவில்லை. வெறும் ஆயிரத்து ஐந்நூறை நீட்ட விரும்பாத நான், “இந்தா மகன் நீ இந்த வேகாத வெய்யிலில் அலைகிறாய் . இந்தா இதை வைத்துக்கொள் என இரண்டாயிரம் ரூபாவை அவனது கைகளில் வைத்துவிட்டு வேறு பேச்சுக்கு இடம்வைக்காமல் அந்த ஓவியத்துடன் வீட்டுக்குள் நுழைந்து கதவை மூடினேன். எமது வீட்டில் களவெடுத்தவன் கையில் இந்த ஓவியம் கிடைத்திருக்கலாம், அதன் பெறுமதியை அறியாதவன் அந்தப் படக்கடையில் அதை நூறு இருநூறுக்கு விற்றிருக்கலாம் என எனது யூகம் சொன்னது. ஆனால் எனக்கோ அது....?

ஆமாம் ... மெல்லிய கண்ணாடி இழைபோன்ற சேலை காற்றிலே பறந்து ,அந்த அழகிய இளம் பெண்ணின் அங்க எழிலை அதனூடாக வெளிக்காட்ட, உயர்ந்த மரக்கொப்பில் தொங்கும் ஊஞ்சலை, பால்போன்று தென்படும் அவளது நீண்ட கரங்களால் பற்றிப் பிடித்தபடி, கால்கள் இரண்டிலும் கொலுசு மின்ன, நீண்ட அவளது கருங்கூந்தல் காற்றில் பறக்க, அவளது இளமைகொஞ்சும் வதனத்தில் கயல்விழிகள் கதைபேச, செவ்விதழ்களில் இறைபோன்ற புன்னகை தவழ,அவள் ஆடும் ஊஞ்சல் வானத்தை தொடும் விதமாக ஆடிக்கொண்டிருந்தது. அந்த ஒப்பற்ற ஓவியத்தை விவரிக்கும் ஆற்றல் என்னிடம் இல்லை. அப்படி அதி அற்புதமாக அந்த அழகுப்பெண்ணை வரைந்து, உயிர்ப்புடன் இன்றும் வாழவைத்த, அந்த அற்பு ஓவியன் இரவிவர்மா, என்றென்றும் அந்த ஓவியத்தில் ஒன்றித்து காலத்தை வென்றவனாக காட்சிதர, உடனடியாக அந்த அழகோவியத்தை எனது வீட்டுச்சுவரில் மாட்டி அழகுபார்த்து, இழந்த சொர்க்கத்தை மீண்டும் அடைந்த மகிழ்ச்சியில் மிதந்தேன் நான்...



மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச

# 32ஆவது நினைவு நாள்

பேராசிரியர் சரித்த ஹேரத்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மறைவுக்கு இன்றுடன் 32 ஆண்டுகள் கடந்து விட்டன. 1993 மே 1ஆம் திகதி அவருக்கு எதிராக நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் இன்னும் பலரின் நினைவில் உள்ளது. இந்த நாட்டின் சமூகத்தின் சமீபத்திய அரசியல் போக்குகளை ஆராய்பவர்களுக்குத் தவிர்க்க முடியாத அபிவிருத்தி பங்களிப்பை (Development Contribution) சேர்த்த சிறந்த அரசியல்வாதியாக அவரை ஒருபுறம் மதிப்பிடுவது உண்மையாகும். அதற்கு அப்பால், பல விவாதங்களில் பங்கேற்கக்கூடிய பல தலையீடுகள் பிரேமதாச அதிபரின் அரசியல் செயல்பாடுகளில் வெளிப்படுகின்றன. இந்தக் கட்டுரையில் நான் பல்வேறு பரப்புகளில் பரவியுள்ள அவரது மக்கள் சேவையின் பிரதிபலிப்பைப் பற்றி ஆராய்கின்றேன். இவை அனைத்திலிருந்தும் வெளிப்படும் ஒரு முடிவு என்னவென்றால், இந்த நாட்டின் சமூகத்திற்கு அவர் ஒரு புதிய அபிவிருத்தி மாதிரியை முன்மொழிந்தார் என்பதாகும். பொருத்தமான முறையில் கூறுவதானால், காலனித்துவத்திற்குப் பிந்தைய இலங்கை அரசியலில், மேற்கத்திய மாதிரியை இந்த நாட்டிற்கு பொருத்தி மற்றும் உள்நாட்டுத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட புதிய வளர்ச்சி மாதிரியை பிரேமதாச சனாதிபதி அவர்களின் செயல்பாடுகள் மூலம் உருவாக்க முடியும் என்பதாகும்.

அவரது ஞாபகார்த்தம் இத்தகைய அடிப்படையில் பிரேமதாச தலையீட்டை (Premadasa intervention) புரிந்துகொள்வதன் மூலம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## பிரதிநிதித்துவ சனநாயகத்திற்கு புதிய பொருள்கோடல்:

எனது அவதானிப்பின் முதல் விடயம் என்னவென்றால், பிரேமதாசா இந்த நாட்டின் ஜனநாயக மாதிரி பற்றி முன்வைத்த முக்கியமான கருத்தாகும். காலனித்துவ ஆட்சி முடிவடைந்ததும், இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஜனநாயகம்' அல்லது மக்களின் விருப்பத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி என்ற கருத்தை சில தலைவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று தாங்கள் விரும்பும் எதையும் செய்வதற்கான முறையாகப் பயன்படுத்தினர்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பொருள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே மக்களின் கருத்தைக் கேட்கும் நடைமுறையாக மாறியது இந்த வழியில்தான். பிரேமதாச இந்த விடயத்தில் வேறு கோணத்தில் ஆய்வு செய்தார் என்பது 1973ஆம் ஆண்டில் கொழும்பு ரோட்டரி கிளப்பில் அவர் நிகழ்த்திய முக்கிய உரையைப் பார்க்கும்போது தெரிகிறது. குறிப்பாக, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் வாக்காளரின் பங்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வாக்களிப்பதோடு, நின்றுவிடாமல், வளர்ச்சி செயல்முறைகளுக்கான அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கு தொடர்ந்து பங்களிக்கும் ஜனநாயகம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அவர் முன்மொழிந்தார். 1970களில் எதிர்க்கட்சி உறுப்பினராக பிரேமதாசா முன்வைத்த இந்த கருத்து, 1990களில் தத்துவார்த்த ரீதியில் விவாதிக்கப்படும் 'Deliberative Democracy' அல்லது பங்கேற்பு ஜனநாயகம் பற்றிய கோட்பாட்டுடன் மிகவும் பொருத்தமான கருத்தாகும். இந்த யோசனையை செயல்படுத்தும் முயற்சியாக 1989இல் பிரேமதாச அறிமுகப்படுத்திய கிராமோதய சபை செயல்பாட்டை புரிந்துகொள்ளலாம் என்பது எனது கருத்தாகும்.

> **கிராமப்புற திறனற்ற உழைப்பைப் பயன்படுத்தி, செல்வ வாய்ப்புகள் சமூகத்தில் பகிரப்படும் அடிப்படையை உருவாக்குவதன் மூலமும், வளர்ச்சியின் மூன்றாவது பாதையை நிறுவுவதும் பிரேமதாசவின் அபிவிருத்தி மாதிரியின் அடிப்படை என்பது எனது கருத்தாகும்**

ஒரு பக்கத்தில் பிரதேச சபையாக, புதிய கிராமிய/நகர்ப்புற நிர்வாக கட்டமைப்பை உருவாக்கி கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடிமக்களின் பங்கேற்பை உருவாக்கிய பிரேமதாச, தனது கிராமோதய கருத்தாக்கத்தின் மூலம் இந்த செயல்முறையின் சிறிய அலகான கிராமத்தை 'உரையாடல் சபையாக' மாற்றினார். ஒரு கிராமத்தில் உள்ள சமூகத் தலைவர்களான மதத் தலைவர்கள், கல்வித் துறையின் அதிபர்கள், கிராமப்புற சமூக அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட குழுத் தலைவர்களை ஒன்றிணைத்து பங்கேற்பு ஜனநாயகத்தின் கிராமிய மாதிரியாக. கிராமோதய சபை உருவாக்கப்பட்டது,

அதேபோல், ஜன சவிய திட்டத்தில் சமூக செயல்பாட்டு பகுதியை சேர்த்தது, அவரது சிந்தனையில் இருந்த 'inclusive' அல்லது உள்ளடக்கிய மனப்பான்மையையே காட்டுகிறது. நாட்டு மக்கள் அரசியல் ஜனநாயகத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் நிலையில், சமூகம் ஜனநாயகத்திலிருந்து விலகிச் செல்வதை அவர் புரிந்துகொண்டார் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதன் காரணமாக, மக்கள் அதிகாரமளிக்கும் செயல்முறையிலிருந்து விலக்கப்படுகிறார்கள் அல்லது exclusive reading-க்கு செல்கிறார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஜன சவிய திட்டத்தில் வெறும் பொருளாதார உதவி வழங்கும் செயல்முறை மட்டுமல்லாமல், மக்களிடையே உரையாடலை வளர்த்து, வளர்ச்சி செயல்முறைகளில் பங்கேற்க வைக்கும் மாதிரி உருவாக்கப்பட்டது இதன் அடிப்படையில்தான்.

## நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு

பிரேமதாசாவின் அபிவிருத்தி மாதிரியில் காட்டப்பட்ட மற்றொரு மிக முக்கியமான விடயம் சமூக நலன்புரி (social welfare) மற்றும் சமூகப் பாதுகாப்பு (social security) ஆகிய இரண்டையும் தனித்தனியாக நிலைநிறுத்துதல். பெரும்பாலான அரசியல்வாதிகள் இதை ஒரே விடயமாகப் பார்க்கின்றனர். எனவே, ஒரு பக்கத்தில் சமூக நலன்புரி என்பது 'ஏழைகளுக்கான ஒன்று' என்ற தவறான கருத்து வளர்வதற்கு காரணம், அது சமூகப் பாதுகாப்பின் ஒரு பகுதியாகப் பார்க்கப்படுவதால். ஒரு நாட்டின் சமூக நலன்புரியாக கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் அரசின் தலையீட்டால் கட்டமைக்கப்பட வேண்டும், ஏனெனில் அவை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் பயன்படுத்தக்கூடிய சேவையாக இருக்க வேண்டும். சமூக நலன்புரி என்பது ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் வழங்கப்படும் சேவை அல்ல. சமூகப் பாதுகாப்பு என்பது அதிலிருந்து வேறுபட்ட விடயம். அதன் கருத்து சமூகத்தில் வசதி குறைந்த சமூகக் குழுக்களை அதிகாரப்படுத்தி முக்கிய சமூக நீரோட்டத்தில் சேர்ப்பதாகும். ஜன சவிய போன்ற திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டது இத்தகைய சமூகப் பாதுகாப்பு திட்டமாகும்.

அதோடு மட்டுமல்லாமல், ஜன சவிய திட்டத்தில் ஒரு பக்கத்தில் சமூகத்தின் அடித்தள மக்களின் ஊட்டச்சத்து பற்றிய புதிய கோட்பாடு உருவாக்கப்பட்டது, மறுபுறம் முதலீடு, சேமிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி அம்சத்தில் புதிய பாதை திறக்கப்பட்டது.

1948க்குப் பிறகு ஒவ்வொரு அரசாங்கமும் சமூக நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பை ஒன்றுடன் ஒன்று குழப்பிக்கொண்டு செய்த செயல்பாடுகள் ஒரு குறிப்பிட்ட மாதிரிக்கு சென்றது ஜனசவிய தத்துவம் (Janasaviya Philosophy) மூலமாகும். அதற்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட சமுர்த்தி, திவி நெகும, அஸ்வெசும போன்ற சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் மேலே உருவாக்கப்பட்ட தத்துவத்தின் வழியே சென்றன.

## வீடுகள் மூலம் உரிமை எண்ணக்கரு பிரேமதாச அவர்களின் அபிவிருத்தி:

மாதிரியில் முக்கியமான துறையாக இருந்தது வீடமைப்புத் திட்டம். 1977ஆம் ஆண்டில் இந்த நாட்டின் வீட்டுக் கலாசாரம் மிகவும் வருத்தத்திற்குரிய நிலையில் இருந்தது. ஒரு பக்கத்தில் சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு வீடு கட்ட காணி இல்லை. மறுபுறம், சிறிய நிலத்துண்டு உள்ளவருக்கு வீடு கட்டுவதற்கு தேவையான மூலதனம் (Capital) இல்லை.

இந்த இரண்டு தேவைகளையும் (காணி மற்றும் மூலதனம்) ஏதோ ஒரு வகையில் பெற முடிந்த சிலருக்கு வீடு கட்டும் தேவை இல்லை. இதன் காரணமாக 1980களின் முற்பகுதியில் நாடு முழுவதும் கூடாரங்கள், குடிசைகள், தகர வீடுகள், வைக்கோல் கூரை வீடுகள் போன்ற மிகவும் அடிப்படை வகையான வீடுகளால் நிறைந்த கிராமங்கள் காணப்பட்டன.

பிரேமதாசாவின் அபிவிருத்தி மாதிரியில் வீடுகள் குறித்த தலையீடு நாட்டில் இருந்த அந்த 'குடிசை மனப்பான்மையை' முற்றிலும் புரட்சிகரமாக மாற்றியது. அது மட்டுமல்லாமல், அவர் வீடுகள் மூலம் உரிமை பற்றிய புதிய கருத்தாக்கத்தை நாட்டிற்குக் கொண்டு வந்தார். உரிமை இல்லாத மக்கள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்கிறார்கள். வெறும் விரயமான வாழ்க்கை மற்றும் குடிப்பழக்கம் போன்ற தாழ்ந்த அடிமைத்தனங்கள் அதிகரிப்பதற்கு ஒரு காரணம், அந்த சமூகப் பிரிவினருக்கு "உரிமைகள்" பற்றிய அடிப்படை சிந்தனை (Fundamental thinking) இல்லாதது.

பிரேமதாச வளர்ச்சி மாதிரியில் வீடுகள் தொடர்பான கருத்து 'வீடுகள் மூலம் புதிய உரிமையை' சமூகப்படுத்துவதாகும். இந்த கருத்தாக்கத்தின் மூலம் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் 'அலைபாயும் வாழ்க்கை' வாழ்ந்த சில பிரிவினரை சமூக மற்றும் குடும்ப உறவுகளுக்குள் அழைத்து வர இந்த வீட்டுரிமை வலுவாக தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதேபோல், நாட்டில் வீடுகட்டுதல் ஒரு புதிய பாணியாக உயர் சமூகப் பிரிவுக்கு தகவல் தொடர்பு செய்யப்படுவதும் இந்த வீட்டுத் திட்டத்தின் மூலம் நடந்தது.

1977 அரசாங்கத்தின் முக்கிய திட்டமாக 1978-1983 காலகட்டத்தில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுதலும், 1984-1989 காலகட்டத்தில் பத்து இலட்சம் வீடுகள் கட்டுதலும் இந்த செயல்முறையின் வெற்றி நிலையை காட்டியது.

## பயிற்சி பெறாத தொழிலாளர்கள் அந்நிய செலாவணி ஆதாரமாக

1990க்குப் பிறகு இந்த நாட்டின் ஏற்றுமதித் துறையின் முக்கிய வருமான வழியாக மாறியது ஆடை ஏற்றுமதியாகும். இது பிரேமதாச அவர்களின் அடிப்படை கருத்தாக்கம் மற்றும் திட்டத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்ட செயல்முறை என்பது பலருக்கும் தெரிந்த விடயம்.

இந்தத் திட்டத்தைப் பார்க்கும் பலரும் நாட்டுக்கு வரும் டொலர் அளவை மட்டுமே காண்கின்றனர். ஆனால், இதன் மற்றொரு முக்கியமான பகுதி என்னவென்றால், நாடு முழுவதும் பரவியுள்ள திறனற்ற உழைப்பை முறையாக பயிற்சி பெற்ற உழைப்பாக மாற்றி, நாட்டின் எதிர்காலத்திலிருந்து ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை கிராமப்புறங்களுக்கு வழங்குவதாகும். செல்வத்தை உருவாக்குதல் அல்லது உற்பத்தி செய்தல் போலவே, செல்வத்தின் பகிர்வும் முக்கியமானது. குறிப்பாக சமூக ஜனநாயக பொருளாதார மாதிரியில் செல்வப் பகிர்வின் செயல்முறை மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. அந்த அர்த்தத்தில், பிரேமதாசவின் அபிவிருத்தி மாதிரியில் சமூகத்திற்கு பகிரப்பட்ட வாய்ப்புகளை உருவாக்குவதற்கு பெரும் கவனம் செலுத்தப்பட்டது என்று கூறுவது சரியானதாகும்.



அபிவிருத்தியின் மூன்றாவது பாதை

இதன்படி தெரிவது என்னவென்றால், ரணசிங்க பிரேமதாசவின் ஒ அடிப்படை அரசியல் தலையீடு பொருளாதார வளர்ச்சித் துறையில் இந்த நாட்டில் புதிய பாய்ச்சலை முன்மொழிந்தது. தீவிர இடதுசாரி மற்றும் தீவிர வலதுசாரி ஆகிய இரு தரப்பும் நாட்டிற்கு தோல்வியடைந்த கொள்கை மாதிரிகளையே கொண்டு வந்தன. வளர்ச்சி பற்றிய ஒரு மத்தியஸ்த புதிய பாதை மூலமாக மட்டுமே இதிலிருந்து வெளியேற முடியும் என்பதே பிரேமதாச அபிவிருத்தி மாதிரியின் அடிப்படையாக இருந்தது.

உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் மற்றும் நோபல் பரிசு பெற்ற அமர்த்யா செனுக்கு அமைய, பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் செயல்பாடுகளுக்கான சுதந்திரத்தை உருவாக்குவதாகும். பிரேமதாச அபிவிருத்தி மாதிரியின் அடிப்படை தொலைதூர கிராமப்புற சமூகங்களை கிராம சபைகள் மூலம் பரந்த பொருளாதார வெளியில் வாய்ப்புகளை உருவாக்குவதாக இருந்தது.

இதன்படி, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் புதிய பரிமாணம் மூலம் பங்கேற்பு ஜனநாயகமாக உருவாக்குதல், சமூக நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பை சரியாகப் பிரித்து, சமூகப் பாதுகாப்பு மூலம் முதலீட்டு களத்தை உருவாக்குதல், வீட்டு கருத்தாக்கத்தின் மூலம் உரிமை குறித்த புதிய சமூக ஒப்பந்தத்தை உருவாக்குதல் ஆகியவை முக்கியமானவை.

கிராமப்புற திறனற்ற உழைப்பைப் பயன்படுத்தி, செல்வ வாய்ப்புகள் சமூகத்தில் பகிரப்படும் அடிப்படையை உருவாக்குவதன் மூலமும், வளர்ச்சியின் மூன்றாவது பாதையை நிறுவுவதும் பிரேமதாசவின் அபிவிருத்தி மாதிரியின் அடிப்படை என்பது எனது கருத்தாகும்.

பிரேமதாச மறைந்து முப்பத்திரண்டு ஆண்டுகள் கடந்து விட்ட இந்த தருணத்தில், நாட்டைப் பாதுகாப்பது அத்தகைய புதிய வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வது என்பது தெளிவாகிறது. அதற்காக முன்னேறிச் செல்வதும் தலையிடுவதும் அவருக்கு வழங்கப்படும் சிறப்பான அஞ்சலி என்று கூற விரும்புகிறேன்.



# உலக தொழிலாளர்கள் தினம்



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி/ தூதுவர்

உலகத் தொழிலாளர்கள் தினமானது ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

நெற்றி வியர்வையினை நிலத்தில் சிந்தி, உழைப்பையே தமது மூலதனமாகக் கொண்டு , தாம் வாழும் தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கின்ற தொழிலாளர்களின் உன்னத தன்மையினை உலகிற்கு அறிமுகப்படுத்திய இதே தினத்தில் தான் அவர்களது அடிமைச் சங்கிலி உடைத்தெறியப்பட்டது.

உழைப்பாளர்களைக் கௌரவிக்கும் முகமாக கொண்டாடப்படும் இந்த நாள் உலகிலுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உரிய முக்கியமான நாளாகும்.

உழைப்பாளர்களின் ஒற்றுமையையும்,

மன உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்திய இந்த நாளில் தான், உழைக்கும் தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை, ஊழியத்திற்கேற்ற ஊதியம் முதலானவற்றை சட்டபூர்வமாக உலக அரங்கில் அங்கீகாரம் செய்யப்பட்டது.

1886ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று சிகாகோ நகரில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி எட்டு மணி நேரம் வேலை கேட்டு நடத்திய மகத்தான வேலை நிறுத்தப் போராட்டத்தின் அடையாளமே இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற மே தினமாகும்.

உலகின் பல்வேறு நாடுகளால் இத் தினம் வெவ்வேறு பெயர்களால், வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்படுகின்றது.

அனேகமான நாடுகளில் இந்த தினம் உத்தியோகப்பூர்வமான விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளமை இதனது சிறப்பம்சமாகும்.

உழைப்பாளர்கள் ஒன்று சேர்வதற்கும், அவர்கள் தங்களது உரிமைகளைத் தட்டிக் கேட்பதற்கும் உறுதுணையாக நின்றவர் தான், பொதுவுடமைக் கொள்கையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவரும்,

'மூலதனம்' (The Capital) என்ற பிரசித்தமான நூலை இயற்றியவரும், ஜேர்மன் நாட்டுத் தத்துவஞானியுமான 'கார்ல் மார்க்ஸ்' என்பவர் ஆவார்.

"உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். நீங்கள் இழப்பதற்கு எதுவுமில்லை. அடிமைச் சங்கிலிகளைத் தவிர, ஆனால், பெறுவதற்கோ பொன்னான ஒரு உலகம் காத்திருக்கின்றது" என்ற உன்னதமான கோஷத்தினை எழுப்பி, அனைத்து தொழிலாள வர்க்கத்தினரையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தவர் ஆவார்.

1867 ஆம் ஆண்டு வெளியான 'மூலதனம்' என்னும் நூலில் 'வேலை நாள் குறித்து' என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடும் பொழுது,

"வேலை நாளுக்கு சட்டப்பூர்வமான அளவு முதலாவது தேவையாகும். இது இல்லாமல் தொழிலாளி வர்க்கம் முன்னேற்றம் மற்றும் விடுதலைக்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் முழுமையாக இருக்காது. வேலை நாளுக்கான சட்டப்பூர்வ அளவு எட்டு மணி நேரமாக இருக்க வேண்டும்" என்று குறிப்பிடுகின்றார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அந்த நாட்டிலுள்ள உழைக்கும் வர்க்கத்தினரின் அர்ப்பணிப்பும், தியாகச் சிந்தையும் இன்றியமையாதது.

உழைப்பாளர் வர்க்கம் என்றொன்று இல்லாமலிருந்திருந்தால் இந்த உலகம் இன்று நிலை தடுமாறிப் போயிருந்திருக்கும்.

உடலினை இயந்திரமாக்கி, உழைப்பினை உரமாக்கி, உலகத்தை இயங்க வைக்கும் தொழிலாளர்களின் கைகளில் தான் இவ்வுலகம் தங்கியுள்ளது.

அவ்வாறான தொழிலாள வர்க்கம் உலகிற்கு ஆற்றுகின்ற பங்களிப்பினை நினைவு கூறும் முகமாக இத் தினம் கொண்டாடப்படுகின்றது.

உழைப்பாளர்கள் மக்களுடைய நாளாந்த செயற்பாடுகளில் பின்னிப் பிணைந்துக் காணப்படுவதனால் அவர்களது பங்களிப்பினை நினைவு கூறுதல் அவசியமாகும்.

எமது நாட்டில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும் குரல் கொடுத்த 'தொழிலாளர் இயக்கத்தின் தந்தை' என கருதப்படுகின்ற அலெக்ஸாண்டர் ஏக்கநாயக்க குணசிங்கவை இத்தினத்தில் நினைவு கூறுவது அவசியமாகும்.

இலங்கையினது தொழிற்சங்க வரலாற்றில் அவரது பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இன்று நடக்கும் மே தின விழாவில் பங்கேற்கும் பல்வேறு அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், தங்களது கோஷங்களை வழமை போல முன் வைத்தாலும் கூட, இந்த வருடம் இக்கட்சிகள் வரவிருக்கின்ற தேர்தல்களைக் கருத்திற் கொண்டு, தத்தமது வாக்கு வங்கிகளை எவ்வாறு அதிகரித்துக் கொள்ள முடியும் என்பதில் அக்கறை செலுத்துமென்று எண்ண இடமுண்டு.

மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களில் அங்கம் வகிக்கின்ற பெருந்தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், தாம் சார்ந்த மக்களின் வேதன உயர்வு சம்பந்தமாக பல்வேறுப்பட்ட காலங்களில் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்திருந்தாலும் கூட, இன்றும் அந்த மக்களது வேதன உயர்வு அதிகரிக்கப்படாதது கவலைக்குரிய விடயமாகும்.

இவர்களது சம்பள உயர்வு அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு உயர்த்தப்படுமா அல்லது அது கானல் நீராகவே காட்சி அளிக்குமா என்பதனைக் கூட காலம் தான் தீர்மானிக்கும்.

தொழிலாளர்களின் வேதனம் சம்பந்தமாகக் கதைத்துக் கொண்டிருந்த பொழுது எனது நண்பர் ஒருவர் கூறிய கவிதை எனது உள்ளத்தை நெருடிச் சென்றது.

"நட்ட மரமெல்லாம் வளர்ந்து விட்டன, நடும் போது குனிந்தவன் மட்டும் இன்னும் நிமிரவேயில்லை.காலத்திற்கேற்ற கவிதையாகவே எனக்கு தென்படுகின்றது.

அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவினை சமாளிக்கக் கூடிய வகையில், வருமானம் இல்லாத ஒரு நிலையிலேயே இன்றைய தொழிலாள வர்க்கம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் பல குடும்பங்கள் தமது உணவு நுகர்வினைக் கூட குறைக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு காரணம் அவர்கள் தங்களது குழந்தைகளுக்கு படிப்பு, மருத்துவம் மற்றும் வேறு தேவைகளுக்கு பணத்தினை ஒதுக்க வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றனர்.

இதனால் பல்வேறு கட்சிகளும் அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவினைக் கண்டித்தும், மிக உயர்ந்த அளவில் காணப்படுகின்ற பொருட்கள் சேவைகளின் மீதான வரியமைப்பினை கண்டித்தும், மக்களது வருமானத்தை அதிகரிக்கக் கோரியும் தமது கோஷங்களை முன் வைக்கலாம் எனக் கருத முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தினது அதிகளவான நிபந்தனைகளைக் கண்டித்தும் அறிக்கைகளை விட சாத்தியமுண்டு.

மாறாக, இந்த அரசியல் கட்சிகள் எவ்வாறு வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும்? மக்களது வேதனத்தை எவ்வாறு அதிகரிக்க முடியும்? எமது ஏற்றுமதி பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்த முடியும்? அந்நிய செலாவணியை எவ்வாறு அதிகரிக்க முடியும்? போன்ற பல்வேறுபட்ட விடயங்களுக்கு ஒரு தீர்வினை தத்தமது கூட்டங்களுக்கு வருகின்ற மக்களுக்குத் தெளிவுபடுத்தினால், அது மக்கள் மனங்களில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துவதோடு, அவர்களது சிந்தனையில் ஒரு நேர்மறைத் தன்மையினை ஏற்படுத்துவதாக அமையுமென கருத நியாயமுண்டு.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இன்று ஒரு பதற்றமான சூழ்நிலைக்கு வித்தாக இருக்கின்ற இஸ்ரேலிய - பாலஸ்தீன யுத்தத்தினால் பாலஸ்தீன தேசத்தை சேர்ந்த தொழிலாள வர்க்கம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இவர்களுக்கு ஆதரவு தெரிவித்துக் கூட கோஷங்கள் முன்வைக்கப் படுமெனக் கருதலாம்.

> **"இந்த அரசியல் கட்சிகள் எவ்வாறு வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும்? மக்களது வேதனத்தை எவ்வாறு அதிகரிக்க முடியும்? எமது ஏற்றுமதி பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்த முடியும்? அந்நிய செலாவணியை எவ்வாறு அதிகரிக்க முடியும்? போன்ற பல்வேறுபட்ட விடயங்களுக்கு ஒரு தீர்வினை தத்தமது கூட்டங்களுக்கு வருகின்ற மக்களுக்குத் தெளிவுபடுத்தினால், அது மக்கள் மனங்களில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துவதோடு, அவர்களது சிந்தனையில் ஒரு நேர்மறைத் தன்மையினை ஏற்படுத்துவதாக அமையுமென கருத நியாயமுண்டு**

இவ்வாறான பல்வேறுபட்ட சிந்தனைக் கண்ணோட்டத்தில் கொண்டாடப்படுகின்ற உழைப்பாளர் தினமானது உழைக்கும் வர்க்கத்தினது அபிலாசைகளை வென்றெடுக்குமானால் அது பாராட்டப்படக் கூடியது. கோஷங்கள், அறிக்கைகள் என்பன வெறுமனே வாய்ச்சொல்லில் மாத்திரம் இல்லாமல், அது செயற்பாட்டு உருவில் வரும் பொழுது தான் மக்களது மனதிலும் அது நீடித்து நிலைத்திருக்கும்.

உழைப்பாளர் தினம் தொடர்பாக பல கவிஞர்கள் காலத்தால் அழியாத பல பாடல்களை உலகிற்கு வெளிப்படுத்தியிருந்தனர்.

கவியரசு கண்ணதாசனின் வரிகளில்,

"எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்-இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்.
வல்லான் பொருள் குவிக்கும் தனி உடமை
வல்லான் பொருள் குவிக்கும் தனி உடமை-நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடமை".

"ஒன்று எங்கள் ஜாதியே
ஒன்று எங்கள் நீதியே
உழைக்கும் மக்கள் யாவரும்
ஒருவர் பெற்ற மக்களே
உழைக்கும் மக்கள் யாவரும்
ஒருவர் பெற்ற மக்களே…"

"துடிக்கும் ரத்தம் பேசட்டும்
துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்
உழைக்கும் வர்க்கம் சேரட்டும்
உரிமை உடமை காணட்டும்…"

தங்களது உழைப்பை வியர்வையாக சிந்தி, மானிட வர்க்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அனைத்து உழைப்பாளர் வர்க்கத்தினருக்கும், எமது மனமார்ந்த மே தின வாழ்த்துக்களைப் பகிர்ந்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கொல்கத்தா

# தீ விபத்தில் 14 பேர் பலி

மத்திய கொல்கத்தாவின் பால்பட்டி மச்சுவா அருகே உள்ள ஹோட்டல் ஒன்றில், செவ்வாய்க்கிழமை (29) அன்று இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

தீ பிடித்தபோது, அங்கிருந்தவர்கள் பலரும் வேகமாக வெளியேறத் தொடங்கியுள்ளனர். கட்டிடத்தின் 4ஆவது மாடியில் சிக்கியவர்கள் ஏணியின் மூலம் வெளியேற முயற்சி செய்துள்ளனர். இதனால் சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்த தீயானது பரவத் தொடங்கியதால் ஹோட்டலில் பலரும் சிக்கித் தவித்துள்ளனர். இது குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து, தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.


சில மணி நேரப் போராட்டங்களுக்குப் பின்னர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இதனையடுத்து, ஹோட்டலுக்குள் சென்று அதிகாரிகளுக்கு சோதனை செய்துள்ளனர்.



அப்போது தீயில் கருகிய நிலையில், 14 பேரின் உடலை அதிகாரிகள் மீட்டுள்ளனர். உயிரிழந்த 14 பேரில் 3 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா/சீனா

## இந்தியர்களுக்கு சீனா அழைப்பு



திபெத்தில் உள்ள புத்த மத மற்றும் இந்து மத புனிதத் தலங்களைப் பார்வையிட இந்திய யாத்திரிகர்கள் வரலாம் என சீன வெளியுறவுத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

கொரோனா தொற்று பரவியதாலும், எல்லையில் நடந்த மோதல் காரணமாகவும் இந்தியா - சீனா இடையே உறவுகள் பாதித்ததாலும் கடந்த 2020ஆம் ஆண்டு முதல் இந்திய யாத்திரிகள் சீன எல்லையைக் கடந்து திபெத்தில் உள்ள கைலாஷ் மலை மற்றும் மானசரோவர் ஏரி போன்ற புனிதத் தலங்களுக்குச் செல்ல முடியாமல் இருந்தது.

இந்நிலையில், கடந்தாண்டு டிசெம்பர் மாதம் இருதரப்பினர் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில், 6 அம்ச ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதில் இந்திய யாத்ரீகர்கள் மீண்டும் திபெத் வருவதை ஊக்குவிக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, திபெத்தில் உள்ள கைலாஷ் மலை, மானசரோவர் ஏரி ஆகியவற்றைப் பார்வையிட இந்திய யாத்ரீகர்கள் வரலாம் எனவும், இதற்காக இந்தியாவுடன் இணைந்து செயல்பட சீனா தயாராக இருப்பதாகவும், சீன வெளிறவுத்துறை செய்தி தொடர்பாளர், செவ்வாய்க்கிழமை(29) அன்று தெரிவித்துள்ளார்.

பெங்களூரு

பாகிஸ்தானுக்கு ஆதரவாக

## கோஷமிட்டவர் அடித்துக் கொலை

கர்நாடகாவில் உள்ள மங்களூருவில் கிரிக்கெட் போட்டியின் போது, பாகிஸ்தானுக்கு ஆதரவாக முழக்கம் எழுப்பிய 30 வயதான நபர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து, இது குறித்து வழக்குப் பதிவு செய்த பொலிஸார் 12 பேரைக் கைது செய்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டம் குடுபு கிராமத்தில், திங்கட்கிழமை(28), உள்ளூர் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுள்ளது. இதில், அப்பகுதியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்நிலையில், ஆட்டத்தின்போது, நபர் ஒருவர் 'பாகிஸ்தான் வாழ்க' என கோஷம் எழுப்பியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அங்கிருந்தவர்களில் 20க்கும் மேற்பட்டோர் கும்பலாகச் சேர்ந்து, அந்த நபர் மீது சரமாரி தாக்குதல் நடத்தினர். கற்கள், கட்டைகளைக் கொண்டு அந்த நபரை சரமாரியாக அடித்தனர். இதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, 19 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். சம்பவ இடத்தில் பதிவான சிசிடிவி காட்சி ஆதாரங்களின் அடிப்படையில் 12 பேரைக் கைது செய்துள்ளனர்.

மேலும், 10 பேரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். கும்பல் தாக்கியதில் உயிரிழந்த நபரின் பெயர், எந்த ஊரைச் சேர்ந்தவர் என்ற எந்த விவரமும் இதுவரை தெரியவில்லை.



இந்தியா/பாகிஸ்தான்

அடுத்த 24 முதல் 36 மணி நேரத்திற்குள்

## பாகிஸ்தான் மீது தாக்குதல்?



அடுத்த 24 முதல் 36 மணி நேரத்திற்குள் இந்தியா, இராணுவத் தாக்குதலைத் திட்டமிடுவதாக, தங்கள் உளவுத்துறை எச்சரித்துள்ளதாக பாகிஸ்தானின் தகவல்தொடர்புத்துறை அமைச்சர் அட்டாவுல்லா தரார் தெரிவித்துள்ளார்.

மேலும், பஹல்காம் சம்பவத்தில் பாகிஸ்தானின் தொடர்பு குறித்து இந்தியா சோடிக்கப்பட்ட மற்றும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகவும், இராணுவ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த இந்தக் கூற்றுக்களை முன்வைப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், பாகிஸ்தானும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுதான் என்றும், இந்தியாவின் குற்றச்சாட்டுகளைத் தான் மறுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதல் குறித்து நடுநிலையான நிபுணர் ஆணையம் மூலம் நம்பகமான மற்றும் வெளிப்படையான விசாரணைக்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பதாகக் கூறியபோதிலும், இந்தியா மோதல் பாதையைத் தேர்வு செய்கிறது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்கா

இந்தியா, பாகிஸ்தானுடன்

## அமெரிக்கா பேச ஆர்வம்

இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களுடன் பேசவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க அரசின் செய்தி தொடர்பாளர் டாமி புரூஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

"அமெரிக்கப் பாதுகாப்புத்துறை செயலாளர் மார்க்கோ ரூபியோ இன்னும் ஓரிரு தினங்களில் இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களுடன் பேசவுள்ளார்.

"இந்தியா, பாகிஸ்தான் விவகாரத்தை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். வெளியுறவுத்துறை மட்டுமின்றி, பல்வேறு அளவுகளிலும் இருநாட்டு அரசுகளிடம் பேச உள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.





சம்பியன்ஸ் லீக்:

## ஆர்சனலை வென்ற பரிஸ் ஸா ஜெர்மைன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் புதன்கிழமை (30) அன்று நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் தோற்றது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை உஸ்மான் டெம்பிலி பெற்றிருந்தார்.



சிம்பாப்வேவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில்

## 217 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற பங்களாதேஷ்

ஜிம்பாப்வேவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பங்களாதேஷ் 217 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் பங்களாதேஷ் தோற்ற நிலையில், சட்டோகிராமில் திங்கட்கிழமை (28) ஆரம்பமான இப்போட்டியின் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 227 ஓட்டங்களை சிம்பாப்வே பெற்றது.

இந்நிலையில், பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், ஷட்மன் இஸ்லாமின் 120, மெஹிடி ஹஸன் மிராஸின் 104, தன்ஸிம் ஹஸன் சகிப்பின் 41, முஷ்பிக்கூர் ரஹூமின் 40, அனாமுக் ஹக்கின் 39, மொமினுல் ஹக்கின் 33 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 444 ஓட்டங்களைப் பெற்று சிம்பாப்வேயின் முதலாவது இனிங்ஸை விட 217 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. பந்துவீச்சில், அறிமுகவீரர் வின்சென்ட் மசெகெசா 5, வெஸ்லி மட்ஹெவெரே, பிரயன் பென்னிட், பிளஸிங் முஸர்பனி, வெலிங்டன் மஸகட்ஸா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



## இங்கிலாந்தின் பந்துவீச்சு ஆலோசகராக சௌதி?

நியூசிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் டிம் சௌதியை தமது வேகப்பந்துவீச்சு ஆலோசகராக நியமிப்பது குறித்து இங்கிலாந்து கருத்திற் கொள்வதாகக் கூறப்படுகிறது.

இப்பதவியில் ஜேம்ஸ் அன்டர்சன் கடமையாற்றிய நிலையில் இவ்வாண்டு உள்ளூர்ப் போட்டிகளில் அவர் விளையாடவுள்ளமை காரணமாக அவர் இப்பதவியில் தொடர முடியாதுள்ளது.

## மொனாக்கோ செல்லும் டயர்?



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான மொனாக்கோவில் அடுத்த பருவத்துக்கு முன்னர் இணையும் மேம்பட்ட பேச்சுக்களில் ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சின் பின்களவீரர் எரிக் டயர் காணப்படுகின்றார்.

மியூனிச்சுடனான 31 வயதான டயரின் ஒப்பந்தமானது நடப்பு பருவகாலத்துடன் முடிவடைகின்றது. மேலதிகமாக ஓராண்டுத் தெரிவுடன் கூடிய மூன்றாண்டு ஒப்பந்தமொன்று குறித்தே பேச்சுக்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.பி.எல்:

## டெல்லியை வென்ற கொல்கத்தா



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டெல்லி.

கொல்கத்தா: 204/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: அங்கிரிஷ் ரகுவன்ஷி 44 (32), ரிங்கு சிங் 36 (25), சுனில் நரைன் 27 (16), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 26 (12), அஜின்கியா ரஹானே 26 (14), அன்ட்ரே ரஸல் 17 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/43 [4], அக்ஸர் பட்டேல் 2/27 [4], விப்ராஜ் நிகம் 2/41 [4], முகேஷ் குமார் 0/17 [2], குல்தீப் யாதவ் 0/27 [3])

டெல்லி: 190/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பப் டு பிளெஸி 62 (45), அக்ஸர் பட்டேல் 43 (23), விப்ராஜ் நிகம் 38 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுனில் நரைன் 3/29 [4], வருண் சக்கரவர்த்தி 2/39 [4], அனுகுல் றோய் 1/27 [4], வைபவ் அரோரா 1/19 [2])

போட்டியின் நாயகன்: சுனில் நரைன்.

இந்நிலையில், ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்கிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை 01, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.